16.01.2025 - வியாழக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 71 குரோதி வருடம் தை மாதம் 03 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 16 பக்கங்கள் - 12




## ஜனாதிபதி அநுரவுக்கு சீன ஜனாதிபதி பெரு வரவேற்பு

# புதிய அபிவிருத்தி யுகத்திற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயார் – சீன ஜனாதிபதி







சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்விற்கும் (Xi Jinping) இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று (15) பிற்பகல் சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது. சீன மக்கள் மண்டபத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு, சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் அமோக வரவேற்பளித்தார், மரியாதை வேட்டுக்களுடன் மிகுந்த கௌரவமான முறையில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு

### பொருளாதாரம், கைத்தொழில்துறை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

செய்யப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து இருதரப்பு அரச தலைவர்களுக்கும் இடையில் சுமுகமான கலந்துரையாடல் நடைபெற்றதோடு அடுத்து இரு தரப்பு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன. அபிவிருத்தியின் புதிய யுகத்திற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி இதன் போது வலியுறுத்தினார். அத்தோடு நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன ஜனாதிபதி சீ ஜிங்பிங், எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும்

02 →

## மாவே-சேதுங் நினைவிடத்தில் ஜனாதிபதி அநுர அஞ்சலி

சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கின் (Xi Jinping) அழைப்பின் பேரில் சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நேற்று (15) காலை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு அடங்கலான கண்காட்சியைப் பார்வையிட்டார்.

02 →



## பிரச்சினைகளை தீர்க்காமல் ரணிலை குற்றஞ்சாட்டுவது முறையல்ல - வஜிர



(கனூஷியா புஷ்பகுமார்)

அரசாங்கம் மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குற்றம் சாட்டி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ரணிலை குற்றம் சாட்டுவதால் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது எனவும் வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

காலி, உலுவிடிகேயில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற அக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில்

02 →

## கல்வியை விட பாதுகாப்புக்கு ஏன் நிதி அதிகம்



(கனூஷியா புஷ்பகுமார்)

வரவு– செலவு திட்டத்தில் கல்விக்காக 271 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ள அரசாங்கம், பொதுப் பாதுகாப்புக்காக 614 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் இது தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்த கல்விக் கொள்கைக்கு முரணானது எனவும் ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

02 →

## அம்பாறை மாவட்டத்தில : இயல்பு நிலை பாதிப்பு சேனநாயக்க சமுத்திர உபரி நீர் வெளியேற்றம்!



### கல்லோயா அணைக்கட்டில் சிறு வெடிப்பு

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக கடந்த 04 நாட்களாக பெய்துவரும் அடை மழை காரணமாக மாவட்டத்தில் தாழ் நில பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான வயல் நிலங்கள் வெள்ள நீரினால் சூழப்பட்டுள்ளதுடன் கடுமையான சேதங்களையும் சந்தித்துள்ளது. ஆலையடிவேம்பு, பொத்துவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திருக்கோவில்,

02 →

## நாட்டில் நிரம்பி வழியும் நிலையில் குளங்கள் : ஆபத்தில்லை: பராக்கிரம, சேனநாயக்க சமுத்திரம், உறுகாமம் வான்கதவுகள் திறப்பு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

நாட்டிலுள்ள குளங்கள் கொள்ளளவுக்கு அதிகமான அளவில் நீர் நிரம்பியுள்ளது. எனினும், இதனால் தற்போது எந்த ஆபத்துமில்லை என நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீரியல் இடர் தொடர்பான முகாமையாளர் ஏ.கே.எஸ். சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து மழை பெய்து வருவதாலும் அதிக நீர் அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்திற்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுவதாலும் அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் ஏற்கனவே திறந்து விடப்பட்டுள்ளன.என்றாலும்,

## “அரசியல் கைதிகள் இல்லை” என்ற பழைய பல்லவி வேண்டாம்

### தமிழ் அரசியல் கைதிகளை விடுவியுங்கள்



“அரசியல் கைதிகள் இல்லை” என்ற பழைய பல்லவியை பாடாமல் தமிழ் அரசியல் கைதிகளை உடனேயே விடுவியுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்து தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியதாவது,

”சிறையில் அரசியல் கைதிகள், இல்லை” என்ற கருத்தைத்தான் எப்போதும் எல்லா சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களிலும், எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். அரசாங்க

02 →

## பொங்கலுக்கான அரிசியை விநியோகிக்க முடியாத அரசு



(ஜே.எம்.ஹாபீஸ்)

தைப் பொங்கலுக்கு தேவையான அரிசியை வழங்க முடியாத அரசு தடுமாற்றம் அடைந்துள்ளதாக மாத்தளை மாவட்ட ஐ.ம.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் ரோகினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

02 →

## வடமராட்சியில் கரை ஒதுங்கிய மிதவை

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கடற்கரை பகுதியில் மிதவை ஒன்று நேற்று புதன்கிழமை கரையொதுங்கியது. நாகர்கோவில் கடற்கரையை அண்டிய பகுதியில் கரையொதுங்கிய அந்த மிதவை மியான்மார் நாட்டு கடற்பகுதியிலிருந்து வந்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.



படம் : மயூரப்பிரியன்

## மாகாண சபைகளுக்கு சொந்தமான 2000 வாகனங்கள் மாயம்

(கனூஷியா புஷ்பகுமார்)

மாகாண சபைகளுக்கு சொந்தமான சுமார் 2000இற்கும் அதிகமான வாகனங்கள் அண்மைய தினங்களில் காணாமல் போயுள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு காணாமல் போயுள்ள வாகனங்களுள் வெவ்வேறான அதிசொகுசு கார் மற்றும் ஜீப் வண்டிகள் உள்ளடங்குவதாக தெரியவருகிறது. மாகாண சபைகளில் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்கள் அவ்வப்போது

02 →

## மட்டு. வந்தாறுமூலையில் ஓட்டோவுடன் சொகுசு பஸ் மோதி விபத்து



(கனகராசா சரவணன்)

வந்தாறுமூலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற பஸ் – முச்சக்கரவண்டி விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் உட்பட 4 பேர்

02 →



3 கிழக்கு பல்கலை மாணவர்கள் படுகாயம்

# அமைச்சு பங்களாக்களை வாடகைக்கு வாங்க தனியார் நிறுவனங்கள் கோரிக்கை

(கனுஷியா புஷ்பகுமார்)

அமைச்சு பங்களாக்களை வாடகைக்கு எடுப்பதற்காக சுமார் 10க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல அரச நிறுவனங்களும், பல நீதிபதிகளும் இந்த வீடுகளுக்கான கோரிக்கைகளை இதற்கு முன்னர் சமர்ப்பித்திருந்தனர்.

இருப்பினும், அமைச்சர்களுக்கான பங்களாக்கள் மற்றும் ஜனாதிபதி பங்களாக்கள் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தற்போது அவற்றின் மதிப்பை மதிப்பிட்டு வருவதாக பொது நிர்வாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

குறித்த மதிப்பீட்டின் பின்னர் அந்த பங்களாக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் தெரிவிக்கப்படும் எனவும் அமைச்சு பங்களாக்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ள வெவ்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அந்த கோரிக்கைகள் தொடர்பில் இது வரையில் பரிசீலிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் கூறினார்.

நாடளாவிய ரீதியில் ஜனாதிபதிக்காக 9 பங்களாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.கொழும்பு, கண்டி, நுவரெலியா, அநுராதபுரம், கதிர்காமம், யாழ்ப்பாணம், எம்பிலிபிட்டிய, பெந்தோட்டை மற்றும் மஹியங்களை ஆகிய பிரதேசங்களில் குறித்த ஜனாதிபதி பங்களாக்கள் காணப்படுகின்றன.

சில அமைச்சு பங்களாக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு பழுதடைந்து காணப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. அவற்றை புனரமைப்பதில் நிதித் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது

# மீனவர்கள் தொடர்பில் ஸ்டாலினுக்கு அமைச்சர் சந்திரசேகரன் விளக்கம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

தமிழக மீனவர்கள் எதேச்சதிகார போக்கில் இலங்கையின் கடல்வளங்களை சூறையாடுகிறன்றனர். அதனை தடுப்பதற்கே அரசாங்கம் சட்டத்தை கடுமையாக்கியுள்ளதுடன், கைதுகளையும் மேற்கொண்டு வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அயலக தமிழர் மாநாட்டில் கலந்துகொள்ள தமிழகம் சென்றிருந்த அமைச்சர் சந்திரசேகரன் தமிழக ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில்,

"தமிழக மீனவர்களால் ஆந்திரா, கேரளா, குஜராத் அல்லது பாகிஸ்தான் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட முடியுமா?. ஆனால், இலங்கை கடல் பரப்பில் மாத்திரம் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதுடன், எதிர்கால தலைமுறையின் கடல்பரப்பையும் சூறையாடுகின்றனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு அனுப்பும் கடிதத்தில் தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயல்பாடுகள் குறித்து குறிப்பிடுவதில்லை. யுத்தத்தால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதுதான் ஓரளவு மீண்டெழும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரம் சுரண்படும்போது அவர்களால் அடுத்தகட்டமாக என்ன செய்ய முடியும்?

# அரிசி இறக்குமதி போர்வையில் தானியங்கள் இறக்குமதி



## முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர

(கனுஷியா புஷ்பகுமார்)



நாட்டு அரிசியை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் அதிகளவில் பாஸ்மதி அரிசி, பயறு, வேர்கடலை மற்றும் உளுந்து ஆகியவை காணப்பட்டுள்ளதாக முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

திட்டமிட்ட குழுவொன்று அரிசி கொள்கலன்களுக்கு இடையே ஏனைய தானியங்களை அதிகளவில் இறக்குமதி செய்துள்ளதாகவும் தற்போது அவற்றை அவர்களின் களஞ்சியசாலைகளில் மறைத்து வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாஸ்மதி அரிசியை மாத்திரம் இறக்குமதி செய்யும் போது அரசாங்கம் அதிகளவு வரியை விதிப்பதால் நாட்டு அரிசியை இறக்குமதி செய்யும் பெயரில் 65 ரூபாய் வரியின் கீழ் பாரியளவு பாஸ்மதி அரிசியை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்துள்ளதாக முன்னாள் விவசாய அமைச்சர் கூறியுள்ளார்.

தற்போது சந்தையில் பாஸ்மதி அரிசி மாத்திரமன்றி பயறு, உளுந்து ஆகிய தானியங்களின் விலைகளில் சற்று வீழ்ச்சி காணப்படுவதற்கான காரணம் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட தொகையானது சந்தைக்கு விடுவிக்கப்பட்டமையே என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட அரிசித் தொகையானது மொத்த வியாபாரிகளால் மீள பொதியிடப்பட்டு அதிக விலைக்கு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த அவர் நாட்டில் அரிசி விநியோகத்தை அரசாங்கம் நிர்வகிக்கத் தவறிவிட்டதாகவும் குற்றம் சுமத்தினார்.

நாட்டினுள் சிவப்பு பச்சையரிசிக்கு தட்டுப்பாடு இல்லை எனவும் அந்த அரிசித் தொகை தற்போது நெல் ஆலைகளில் காணப்படுவதாகவும் அவற்றை அதிக விலைக்கு இரகசியமாக விற்பனை செய்து வருவதாவும் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தான் விவசாய அமைச்சராக இருந்த காலப்பகுதியில் அரிசி கிலோ ஒன்றின் சாதாரண விலை 170 ஷரூபாயை விடவும் குறைவாகவே காணப்பட்டதாகவும் முந்தைய அரசாங்கம் குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு அரிசி விநியோகித்ததால் அரிசி நெருக்கடி ஏற்படவில்லை, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு சிவப்பு அரிசி மட்டுமல்ல, வெள்ளை அரிசியையும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் முன்னாள் விவசாய அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சிவப்பு பச்சையரிசி மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் தொடர்பில் தனக்கு தெரியும் எனவும் அவசியமெனில் அவற்றை கண்டுபிடித்து தர முடியும் எனவும் அவர் விளக்கமளித்தார்

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### புதிய அபிவிருத்தி...

இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்த சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே. ஜே. பண்டார ஆகியோரும் பங்கேற்றனர்.

### மாவே-சேதுங்

பின்னர்,சீன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான குங் அரண்மனை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட அவர் அதனைத் தொடர்ந்து சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகர் தலைவர் மாவோ சேதுங் நினைவிடத்திற்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் இந்த சந்தர்ப்பத்தில் இணைந்து கொண்டனர்

### அம்பாறை மாவட்டத்தில்

லகுகல, பாணமை, அம்பாறை, அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நட்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மருதமுனை ஆகிய பிரதேசங்களிலுள்ள தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது.

மழை காரணமாக அநேகமான உள் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு, உள்ளூர் போக்குவரத்துக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தாம்போதிகளிலும் வாய்க்கால்களிலும் நீர் பெருக்கெடுத்துள்ளது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதோடு பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

மாலை வேளையில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்கின்றது. வானம் இருள்சூழ்ந்து காணப்படுவதுடன் கடல் கொந்தளிப்பாக இருப்பதனால் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது.உள்ளூராட்சி பிரதேசங்களில் வடிகான்கள் துப்பரவு செய்யப்படாமலுள்ளதால் மழை நீர் வடிந்தோட முடியாத நிலை காணப்படுகின்றது.

இதே வேளை 75 வருட பழமை வாய்ந்த அம்பாறை மாவட்டத்தின் சேனநாயக்கா சமுத்திரத்தில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் வெள்ள அபாயம் ஏற்படும் ஆபத்து இருப்பதால் மக்கள் கரையோரங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

கல்லோயா நீர்த்தேக்கத்தின் பாதுகாப்பு அணையில் சிறு வெடிப்பு ஏற்பட்டுள்ளமையால் அது மேலும் சேதத்திற்குள்ளாகாமல் இருப்பதற்கு தேவையான பாதுகாப்பு இராணுவத்தினரின் உதவி பெறப்பட்டுள்ளதாக அம்பாறை அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்

### கல்வியை விட பாதுகாப்புக்கு

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்குமாறு கடந்த அரசாங்கங்களை வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, போர் இல்லாத சூழலில் பாதுகாப்புச் செலவை அதரிகரித்தது ஏன் என சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேள்வியெழுப்பினார்.

பாதுகாப்பு அமைச்சின் மூலதனச் செலவு 76 பில்லியன் ரூபாவாக இருந்தாலும் கல்விக்கான மூலதனச் செலவு 65 பில்லியன் எனக் கூறிய அவர் கல்விக்கு இதை விட நிதியை ஒதுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்விக்கு 6 வீதத்தை ஒதுக்குங்கள் எனக் கோரி, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அண்மையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

### பிரச்சினைகளை தீர்க்காமல்

· பங்கேற்று உரையாற்றும் போதே வஜிர அபேவர்தன இதனைத் தெரிவித்தார்.

இம்மாதம் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் காலி மாவட்டத்தில் அனைத்து ஆசனங்களையும் உள்ளடக்கும் விதத்தில் கூட்டங்களை நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், நாடு எந்த திசையில் செல்கிறது என்பது குறித்து மக்களுக்கு தெளிவான பார்வை உள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனுபவமுள்ள ஒரு குழுவை நாடாளுமன்றத்திற்கு அனுப்புமாறு பலமுறை கூறியதற்கு இதுவே காரணம் என்று வஜிர அபேவர்தன வலியுறுத்தினார்.

### பொங்கலுக்கான

அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

அரிசிப் பிரச்சினைக்கு சரியான தீர்வை முன் வைக்க முடியாத அரசு தற்போது வெவ்வேறு காரணங்களைக் கூறுகிறது.முன்னைய ஆட்சியின் போது ஒருவருக்கு 20 கிலோ வீதம் இலவசமாக சிவப்பு நாட்டரிசி வழங்கியதால்தான் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது சிறுபிள்ளைத் தனமான பதிலாகும்.

உணவுக் கொள்கை திட்டமிடல் குழு இது வரை கூடவில்லை. இதிலிருந்து அவர்கள் நாட்டு மக்களது உணவு விடயத்தில் எந்தளவு அக்கறை காட்டி வருகின்றனர் என்பதை உணர முடிந்துள்ளது.

கடந்த காலத்தில் 46 இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டு அதிலிருந்து 29 இலட்சம் மெற்றிக் தொன் அரசி பெறப்பட்டுள்ளது. அதில் நான்கில் ஒறு பாகம் பச்சை அரிசியாகும். எனவே பச்சை அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படவாய்ப்பு இல்லை . இதற்கு அரசின் முறையற்ற அரிசி முகாமையே காரணமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்

### மாகாண சபைகளுக்கு

காணாமல் போயுள்ள நிலையில் குறித்த வாகனங்கள் தொடர்பிலான தகவல்களை கண்டறிய தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்கூறப்படுகிறது. இதேவேளை, மாகாண சபைத்தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிசொகுசு வாகனங்கள் அரசியல்வாதிகளுக்கு நெருக்கமான அதிகாரிகள் பயன்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மட்டு. வந்தாறுமூலையில்

படுகாயம் அடைந்தனர். வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழத்தின் முன்னாலுள்ள பாதசாரி கடவையில் இரவு 10.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தைடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து பஸ்சாரதி கைது செய்யப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் கல்விகற்றுவரும் 3 மாணவர்கள் சம்பவ தினமான நேற்று இரவு செங்கலடியிலிருந்து பல்கலைக்கழக விடுதிக்கு முச்சக்கரவண்டியில் பயணித்துள்ளனர். பல்கலைக்கழகத்தின் முன்னால் விடுதி பக்கம் முச்சக்கரவண்டியை திருப்பும் போது கல்முனையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் முச்சக்கரவண்டியுடன் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விபத்தில் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் உட்பட 3 மாணவர்கள் படுகாயமடைந்ததுடன் மற்றும் ஒருவர் காயமடைந்தார். இதனையடுத்து படுகாயமடைந்த அவர்கள் உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஏறாவூர் போக்குவரத்து பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### "அரசியல் கைதிகள் இல்லை"

தரப்பு அப்படிதான் சொல்வார்கள். அவர்களுக்கு "பயங்கரவாதி". மக்களுக்கு "போராளி". பாலஸ்தீனம் முதல் இலங்கை வரை, உலகம் முழுக்க போராட்டங்கள் நிகழ்ந்த நாடுகளில் இப்படித் தான்.

இந்நாட்டில், 1971ல் தமிழ் ,ளைஞர் ஆயுதம் ஏந்த முன்னமே ஆயுதம் ஏந்திய பின்னர், 1989லும் ஆயுதம் ஏந்தி ஜேவிபி போராட்டம் செய்த போது, கைதாகி சிறையில் இருந்த ஜேவிபி போராளிகளை, அன்றைய அரசாங்கம், "பயங்கரவாதிகள்" என்றது. ஆனால் ஜேவிபியினர்" இல்லை, அவர்கள் அரசியல் போராளிகள்" என்றார்கள்.

2015-2019 கால நமது நல்லாட்சியிலும், டைக்கிடை ஓரிரு அமைச்சர்கள் இப்படி சொன்னார்கள். ஆனால் அன்றைய தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்து, அவர்களை கண்டித்து, அமைச்சரவைக்குள் அவர்களை புறந்தள்ளி, ஏனைய முற்போக்கு அமைச்சர்களுடனும், வெளியே தமிழ் தேசிய கட்சிகளுடனும் இணைந்து, கணிசமான தமிழ் அரசியல் கைதிகளை நாம் சத்தமில்லாமல் விடுவித்தோம். தமிழ் அரசியல் கைதிகளை அதிகமாக விடுவித்தது எமது நல்லாட்சி அரசாங்கம்தான்.இதில் மாற்று பேச்சுக்கு, டமில்லை. ,தனால்தான் இன்று வரை இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது.

ஆனால், அன்று ஆயுத போராட்டம் செய்த ஜேவிபியே, இன்று இப்படி கூறுகிறது. "அரசியல் கைதிகள் இல்லை" என்று கூறி, அவர்களுக்கு பயங்கரவாதிகள் பட்டம் சூட்ட முனைகிறது. 1971ல், தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே, ஆயுதம் தூக்கிய தமது அங்கத்தவர்களை அரசியல் போராளிகளாக அடையாளம் காணும் ஜேவிபி, கைதாகி சிறையில் உள்ள தமிழ் ,ளைஞர்களை, அரசியல் கைதிகள் ,ல்லை என்று கூறுகிறது. இந்த இரட்டை வேடம், இவர்களுக்கு இன்று வாக்களித்த செந்தமிழர்களுக்கு தான் வெளிச்சம்.

### நாட்டில் நிரம்பி வழியும் நிலையில்

தாழ் நிலப் புகுதிகளுக்கு அதிக ஆபத்தக்கள் ஏதுமில்லை. ஆயினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குளங்களையும் நீரோடும் ஆறுகளையும் அண்டிய பகுதிகளிலிருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக மக்கள் வெளியேற்றப்படுகிறார்கள்.

கல்லோயா பாலத்திற்கு மேலே உள்ள அரிப்புக் காரணமாக அருகிலுள்ள தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ஆபத்துக்கள் நேரிடலாம் என்பதைக் கருத்திற் கொண்டு அங்கு வாழும் மக்கள் அப்பகுதிளிலிருந்து வெளியேற்றப்படுகின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உறுகாமக் குளம், அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கவுடுல்ல குளம் ஆகியவற்றிலிருந்து கணிசமான அளவு நீர் வெளியேற்றப்படுவதால் நீரோடும் பகுதிகளை அண்டி வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று கேட்டக் கொள்ளப்பட்டுள்ளது.

பொலொன்னறுவை மாவட்டத்திலுள்ள பல குளங்கள் நிரம்பி வழிகின்றன. கடும் கன மழை காரணமாக பொலொன்னறுவையிலுள்ள பராக்கிரம சமுத்திரத்தின் 4 வான் கதவுகள் 2 அடி உயரம் அளவில் திறந்து விடப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து அருகிலுள்ள மகாவலி ஆற்றில் கலப்பதற்காக வினாடிக்கு 1000 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது.

இதன் காரணமாக கல்லளை, மன்னம்பிட்டி, ஓணேகம, மாணிக்கம்பிட்டி, சுங்காவில் உள்ளிட்ட தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு எச்சரிக்கை முன்னறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலொன்னறுவை மாவட்ட இடர் முகாமைத்தவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மகாவலி நதி பெருக்கெடுத்து ஓடுவதால் சோமாவதி சைத்தியவும் நீரினால் சூழப்பட்டுள்ளது.

சுங்காவில் - பொலொன்னறுவை சோமாதி வீதி பெருக்கெடுத்தோடும் நீரில் முற்றிலுமாக மூழ்கியுள்ளது. அங்கு வீதிக்கு மேலால் 3 அடி வெள்ள நீர் பாய்கிறது. இதனால் அவ்வீதிக்கூடான அனைத்து வகை வாகனப் போக்குவரத்துக்களும் முழுமையாகத் தடைப்பட்டுள்ளன. சோமாவதி விஹாரைக்குச் செல்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

# அர்ச்சுனாவின் எம்.பி பதவியை இரத்து செய்ய கோரிய மனு: விசாரணை ஒத்திவைப்பு!

இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 31ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதிய சுதந்திர முன்னணியின் தலைவர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எம்.கோபல்லவ முன்னிலையில்



நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யத் தனது கட்சிக்காரருக்குக் கால அவகாசம் வழங்குமாறு பிரதிவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கோரினார்.

நீதியரசர்கள் குழாம் உரிய வகையில் அமைக்கப்படாததால், அடுத்த வழக்கு விசாரணையின் போது இந்தக் கோரிக்கையை முன்வைக்குமாறு நீதியரசர், சட்டத்தரணியிடம் தெரிவித்தார். இதனையடுத்து, குறித்த மனு எதிர்வரும் 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த பொதுத் தேர்தலின் போது அரச வைத்தியராகக் கடமையாற்றிக்கொண்டு, வேட்பு மனுவைச் சமர்ப்பித்ததாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். அரச சேவையிலிருந்து விலகாமல் இவ்வாறு வேட்புமனு தாக்கல் செய்வது சட்டவிரோதமானது எனவும் அது தேர்தல்கள் சட்ட விதிகளுக்கு முரணானது எனவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 03ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்:** இன்று செய்யும் செயல்கள் யாவற்றிலும் பொறுமை தேவை.

**ரிஷபம்:** இன்று முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள்.

**மிதுனம்:** குறித்த நேரத்தில் பணி முடிப்பது சற்று கடினமாக இருக்கும்.

**கடகம்:** இன்று சுமுகமான பலன்கள் கிடைக்காது.

**சிம்மம்:** இன்று உங்களுக்கு சேமிப்பு அதிகரிக்கும்.

**கன்னி:** இன்று சாதகமான நாள். விருப்பங்கள் நிறைவேறும் நாள்.

**துலாம்:** இன்று கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.

**தனுசு:** இன்று குடும்பச் செலவுகள் அதிகமாக காணப்படும்.

**மகரம்:** இன்று வளர்ச்சி காணப்படும். வாழ்வின் யதார்த்தத்தை புரிந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.

**மீனம்:** உங்கள் செயல்களை திறம்பட செய்ய இயலாது.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 04:44 வரை துவிதியை பின்பு திரிதியை.
**நட்சத்திரம்:** இன்று பிற்பகல் 12:54 வரை ஆயில்யம் பின்பு மகம்.
**யோகம்:** சித்த,அமிர்த.
**சந்திராஷ்டமம்:** பூராடம்,உத்திராடம்.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**குளிகை:** 09:00 AM முதல் 10:30 AM வரை.
**எமகண்டம்:** 06:00 AM முதல் 07:30 AM வரை.

# கிழக்கு ஆளுநருடன் மீனவ சங்கங்கள் சந்திப்பு



(ஏ.எச். ஹஸ்பர்)

கிழக்கு மாகாண மீனவர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் பிரதிநிதிகளுக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவிற்கும் இடையே நேற்று (15) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மீனவ சங்க பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதுடன் அவர்களின் பிரச்சினைகள் குறித்து எடுத்துக்கூறினர். இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக ஆளுநர் இதன் போது உறுதியளித்தார்.

# சீமெந்தின் விலை குறையும் சாத்தியம்




சீமெந்து மீதான தற்போதைய செஸ் வரியைக் குறைப்பதற்கான முன்மொழிவுக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இதன் மூலம் ஒரு மூடை சீமெந்தின் விலை சுமார் நூறு ரூபாய் குறையும் என்று நிதி அமைச்சின் அதிகாரிகள் குழுவிற்கு அறிவித்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரசாங்க நிதி பற்றிய குழு கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடியபோது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# காலநிலை : நாடாளுமன்ற ஒன்றிய இணை தலைவர்களாக சஜித், அபேவிக்ரம தெரிவு

இலங்கைக் காலநிலை பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பத்தாவது நாடாளுமன்றத்தின் இலங்கைக் காலநிலை பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தை மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பான கூட்டம் கடந்த 08 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதன்போது, ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நலீன் பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசித நிரோஷண எகொட வித்தான ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், இணை அமைப்பாளர்களாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்ன மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இங்கு உரையாற்றிய ஒன்றியத்தின் இணைத் தலைவர்கள், முழு உலகமும் காலநிலை மாற்றம் தொடர்பில் கவனம் செலுத்தும் காலப்பகுதியில் காலநிலை மாற்றத்தினால் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் அதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் கூட்டாகக் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

வடகிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்னாள் செயலாளர் செ.அமிர்தலிங்கம் தலைமையில் நாளை 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கியக்கள நிகழ்ச்சியில் "ஈழத்து தமிழ் இலக்கிய வெளியில் இலங்கையர்கோனின் எழுத்துக்கள்" எனும் தலைப்பில் ஓய்வுநிலை ஆசிரியர் க.விநாயகமூர்த்தி உரையாற்றவுள்ளார்.

# பசிலை நெருங்கும் புலனாய்வுத்துறை உண்மைகள் வெளிவருமா?

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் சொத்துக்கள் குறித்த உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது. இந்த விசாரணையின் ஒரு பகுதியாக கடந்த காலத்தில் பசில் ராஜபக்சவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிவந்த தொழிலதிபர்கள் மற்றும் நண்பர்களிடம் புலனாய்வுத் துறை விரிவான விசாரணைகளைத் தொடங்கியுள்ளது. அத்துடன், பசில் ராஜபக்சவுடன் தொடர்புடைய சொத்துக்கள் குறித்தும் பாதுகாப்புப் படையினரும் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.



அமெரிக்காவில் எவ்வித தொழிலும் செய்யாத பசில் ராஜபக்சவுக்கு அமெரிக்காவில் எவ்வாறு பாரியளவான சொத்துகள் உள்ளன என்றும் அமெரிக்காவில் வசிக்கும் பசில் ராஜபக்சவின் உறவினர்களுக்கும் பாரிய சொத்துக்கள் இருப்பதாகவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பில் வாக்குமூலமொன்றை குற்றப்புலனாய்வு பிரிவு அண்மையில் விமல் வீரவங்சவிடம் பெற்றிருந்தது. இந்தப் பின்புலத்திலேயே தற்போது புலனாய்வு விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள் அமெரிக்காவுக்குச் சென்ற பசில் ராஜபக்ச, பொதுத் தேர்தலின் போதுகூட நாடு திரும்பியிருக்கவில்லை. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை வழிநடத்தும் பொறுப்பும் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவிடம் கையளிக்கப்பட்டுள்ளதால் பசில் ராஜபக்ச எப்போது நாடு திரும்புவார் என தமக்கே தெரியாதென பொதுஜன பெரமுனவின் தகவல் அறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இவ்வாண்டுக்குள் சிவப்பு அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை

(கனுாஷியா புஷ்பகுமார்)

இவ்வாண்டுக்குள் சிவப்பு அரிசித் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புகள் எதுவும் இல்லை என வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.



சந்தையில் ஏற்பட்டுள்ள சிவப்பு அரிசி தட்டுப்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டில் 161,067 ஹெக்டேயர் சிவப்பு நெல் பயிரிடப்பட்டுள்ளதுடன் பெரும் போகத்தில் 648,216 ஹெக்டேயர் நெல் அறுவடை எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. சராசரி நெல் அறுவடையானது ஹெக்டேருக்கு 4,000 கிலோகிராம். ஆகவே, சிவப்பு அரிசி பற்றாக்குறையாவதற்கு எந்த காரணமும் இல்லை என அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுக்குள் சிறு மற்றும் பெரும் போகங்களில் 277,315 ஹெக்டேயர் சிவப்பு நெல் பயிரிடப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 1.1 மில்லியன் மெட்றிக் தொன் நெல் அறுவடை கிடைத்திருக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விசேடமாக, சிவப்பு அரிசியானது மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை போன்று தெற்கு பிரதேசங்களில் மற்றும் கிழக்கு மாகாணத்தில் பயிரிடப்படுகின்றது.

சிவப்பு அரிசி விளைச்சல் காணப்படும் பிரதேசங்களில் நெல் ஆலை களஞ்சியசாலைகள் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில் கடந்த அரசாங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் காரணமாக இந்த நிலை உருவாகியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவிலும் சிவப்பு அரிசியின் விலை அதிகமாக காணப்படுவதனால் அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் போது கப்பல் செலவுகளைத் தவிர்த்து சிவப்பு அரிசி மெட்றிக் தொன் ஒன்று 600 டொலராக காணப்படுகிறது. இந்தியாவுடன் கலந்துரையாடி 7,500 மெட்றிக் தொன் சிவப்பு அரிசியை இறக்குமதி செய்வதற்கான டெண்டர் அழைக்கப்பட்டுள்ளதாக வசந்த சமரசிங்க விளக்கமளித்தார்.

# வெலே சுதாவிற்கு 8 வருட கடூழிய சிறை

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட வெலே சுதா உட்பட மூவருக்கு 8 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த மில்லியன் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்து தொடர்பாக பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர் எனக் கூறப்படும் கம்பொல விதானலாகே சமந்த குமார எனப்படும் வெலே சுதா, அவரது மனைவி மற்றும் மற்றொரு பெண்ணுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் எட்டு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

அதன்படி, நீண்ட விசாரணைக்குப் பிறகு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா படபெந்திகே இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

பிரதிவாதிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன், சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்து, பணம் மற்றும் தங்கப் பொருட்களை பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சுற்றுலாத்துறை வருமானம் 53 வீதம் அதிகரிப்பு

(கனுாஷியா புஷ்பகுமார்)

2024 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த சுற்றுலாத்துறை வருமானம் 53.2 வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில், 14 இலட்சத்து 87 ஆயிரத்து 303 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததனூடாக பதிவு செய்த மொத்த வருமானம் 2,068 மில்லியன் டொலர்கள் ஆகும்.

2024 ஆம் ஆண்டில் இலங்கை க்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 20 இலட்சத்து 53,465 ஆக பதிவான நிலையில், இதனூடாக இலங்கை 3,168.6 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பதிவு செய்துள்ளது.இது ஆண்டு அடிப்படையில் 53.2 வீத வளர்ச்சியாகும்.

2024ஆம் ஆண்டு டிசம்பரில் சுற்றுலாத்துறை வருமானம் 362.1 மில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது. 2023ஆம் ஆண்டு டிசம்பரில் இதன் மதிப்பு 269.3 மில்லியன் டொலர்களாக பதிவானதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# சஜித்தை கூட்டிணைக்க முயலும் ரணிலின் தந்திரம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயம் இன்றைய சர்வதேச பேசுபொருளாக இருந்தாலும், உள்ளூர் எதிர்க்கட்சி அரசியலும் கொஞ்சம் சூடு பிடித்திருக்கிறது.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று இருக்கிறது.

சஜித் பிரேமதாசவின் தாய்க்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே.

இந்த இரு கட்சிகளும் ஒன்றிணையாத வரை, இரு கட்சிகளுக்கும் எதிர்காலம் இல்லை என்பது, ஐக்கிய தேசியக் கட்சி,

ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களின் நம்பிக்கை. சஜித் பிரேமதாச 35 ஆசனங்களுடன் பாராளுமன்றத்தை பிரதிநிதித்து வப்படுத்துகிறார். ரணில் விக்கிரமசிங்க ஐந்து ஆசனங்களுடன் நாடாளுமன்ற அரசியலில் இருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தாய்க்கட்சி தான், ஐக்கிய தேசியக் கட்சி. அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிளவு பட்டு உருவானதே சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கு எதிராக, உட்கட்சிப் போராட்டம் நடத்தி, ஈற்றில் முடியாமல் வெளியேறி சென்றவர்கள்தான் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினர்.

மாற்று அரசியலுக்கு ஏதுவானதாக இலங்கையில் உருவான இந்தக் கட்சி, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் போட்டியில் பின்னடைவை சந்தித்தாலும், எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தில் நீடித்து நிலைக்கிறது என்பதுதான் இன்றைய அரசியல் யதார்த்தம்.

உட்கட்சிக்குள் விட்டுக்கொடுப்பில்லாமல் கட்சியைப் பிளவடையச் செய்தவர் ரணில் என்ற குற்றச்சாட்டு ஐக்கிய மக்கள் சக்தியினால் தொடர்ந்தும் முன் வைக்கப்படுகிறது. அதே நேரம், ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்து சின்னா பின்னம் ஆக்கியவர் சஜித் பிரேமதாசவே என ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறார். ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கின்ற முக்கியஸ்தர்கள் பலரும் இதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றனர்.

இவ்வாறு கட்சிகள் பிளவடைந்ததற்கு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவது மட்டுமல்ல, இதன் ஆதி மூலத்தை கண்டறிவதற்கும் முயற்சி செய்கிறார்கள். இந்த நிலையில், இந்த இரு கட்சிகளும், ஒன்றுடன் ஒன்று சங்கமிக்குமா..? என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்படுகின்றது. தாய் கட்சி பிளவு பட்டதனால், பிரிந்தவரும் நன்மை அடையவில்லை தாய் கட்சியும் வெற்றி பெற முடியவில்லை. ஆகவே, ஒன்றுபடாதவரை நாட்டுக்கு விடிவு இல்லை என்பது ஒரு சிலரின் வாதம்.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க விடுத்து இருக்கின்ற அறிவிப்பு ஒன்றிணையும் முயற்சியில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தி இருப்பதாகவே அறிய முடிகிறது. "தலைமையைப் பற்றி யோசிக்காமல், இணைந்து செயல்படுவோம் வாருங்கள்.." இது ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பு. தலைமையைப் பற்றி பேச வேண்டாம் என்று இவர் அறைகூவல் விடுப்பது, ஐக்கிய மக்கள் சக்தி நிறைய உள்வாங்கி, அந்தக் கட்சியையும் இல்லாமல் செய்வது தான் ரணிலின் தந்திரம் என்று அரசியல் பிரமுகர்கள் பேசிக் கொள்கிறார்கள். இதனை நிராகரிக்க முடியவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் வரலாறு இதுவாகத்தான் இருக்கிறது.

கட்சிகளையும் கட்சித் தலைமைகளையும் உள்வாங்கி, கட்சிகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியது தான் இவருடைய வரலாறு. பொதுவாக உள்ளூர் அரசியலில் இவரை, சதியோடு சம்பந்தப்படுத்திப் பார்ப்பது தான் வழமையாகிவிட்டது. இவர் ஜனாதிபதியாக இருந்த பொழுது கூட, அவருடைய கட்சி ஆதரவாளர்களே நகைச்சுவையாக பேசுவது, "எங்கள் தலைவர் எதையாவது செய்து வெற்றி பெறுவார்... "இந்தக் கூற்று, மக்கள் மத்தியில், பொய்க்க வைத்துள்ளது. இந்த நாட்டு மக்களை, எப்போதும் ஏமாளிகளாக்க முடியாது என்பதை, நடந்து முடிந்த இரு தேர்தல்களும் உறுதியாக நிரூபித்திருக்கின்றன.

ஜனாதிபதியாக இருந்த ஒருவர், படுதோல்வி அடைந்து, மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது, இலங்கை அரசியலில், அதிர்ச்சியோடு பேசப்படுகிறது. சர்வதேசமும் இதற்கு விடை காண இன்னும் முயல்கிறது. ரணில் விக்கிரமசிங்க" MR. CLEAN "என உலகமும் உள்ளூரும் போற்றிய காலகட்டம் இருந்தது. பிற்காலத்தில், அவருடைய அரசியலும் செயல்பாடும் இந்தப் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிலை, இரு கட்சிகளின் கூட்டிணைவுக்கு சாதகமானதொரு நிலையை ஏற்படுத்துமா என்பது தெரியவில்லை...?

இதேபோல, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சஜித் பிரேமதாச மீதும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்ப டுகின்றன. அவருடைய துணைவியாரினதும் சகோதரியினதும் ஆலோச னையை பெற்று இவர் செயற்படுகிறாரென்று கட்சிக்குள் அதிருப்திகள் உருவாகி இருக்கின்றன. அதாவது கட்சியை வழிநடத்துபவர்கள், இந்த இரண்டு பெண்களுமே என்று, சில உறுப்பினர்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு அரசியல் கட்சிக்கு ஆரோக்கியமான பாதையாக தெரியவில்லை. கட்சியில், சிரேஷ்ட தலைவர்கள் இருக்கின்ற பொழுது, அவர்களை கவனத்தில் கொள்ளாது, சஜித் பிரேமதாச தன்னிச்சையாக நடக்கிறார் என்பது தான் குற்றச்சாட்டு. என்றாலும், நடந்து முடிந்த தேர்தலில், தேசிய மக்கள் சக்தியின் பேரலைக்கு மத்தியில், 35 ஆசனங்களை தனதாக்கியுள்ளார் சஜித் பிரேமதாச.

இந்த நிலையை பார்க்கின்ற பொழுது, ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஐக்கிய தேசியக் கட்சியை உள்வாங்குவது தான் சாத்தியம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வருமாறே, ரணில் அழைப்பு விடுக்கிறார். கூட்டிணைவுக்கு இது சாத்தியமாகுமா...?

வரலாற்று பாரம்பரியம் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாமல் செய்த ஒரு தலைவரோடு எப்படி இணைவது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

மக்கள் ஆணை பெற்ற தேசிய மக்கள் சக்தி தலைமையிலான இடதுசாரி அரசாங்கம் ஒன்றை, பதவி கவிழ்ப்பது தான் ரணிலின் இலக்காக இருக்கிறது. இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் உதவியை திரட்டியவாறு, ரணில் எடுக்கின்ற முயற்சி தான், கூட்டிணைக்கும் நாடகமாகவே இதனைப் பார்க்க முடிகின்றது



## வடக்கு விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாய விலை

# பொருளாதார மத்திய நிலையங்களை மீளத்திறக்க திட்டம்



(பு.கஜிந்தன்)

இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்படவேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தைவிலை கிடைக்கவேண்டும். அதற்கு ஏற்றவகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்கு திட்டமிட்டு வருகின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மறவன்புலோ கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில், தற்போதைய காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. முன்னைய காலங்களில் நெல் அறுவடையின்போது மழை பெய்வதில்லை. ஆனால் இப்போது மழையின் பாதிப்பை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சில நாள்களுக்குள் கடும் மழை பெய்தபோதும் தெய்வாதீனமாக மிகப் பெரியளவு நெல் அழிவு ஏற்படவில்லை. அந்த மழை மற்றும் இப்போதும் பெய்யும் மழை என்பனவற்றால் உங்களின் வயல் நிலங்கள் ஈரலிப்பாக உள்ளன. எனவே இதை விவசாயிகள் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களை பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இருபோகத்தை மேற்கொள்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது



வான்பார்த்த பயிராகவே உள்ளது. மழையை நம்பி ஒருபோகம் மாத்திரமே செய்கின்றோம். எனவே தற்போதுள்ள காலநிலையின் மாற்றத்தைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்செய்கையில் ஈடுபட்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவேண்டும்.

எமது மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், எந்தப் பயிரை உற்பத்தி செய்தால் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டும். அதற்கு விவசாயத் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல் அறுவடையுடன் சேர்த்து மூத்த விவசாயிகளை கௌரவித்திருந்தீர்கள். அதற்கு எனது மனமார்த்த பாராட்டுக்கள்.

இன்று இளையோர் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாக மாறிவிட்டார்கள். வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் சிக்கியிருக்கின்றார்கள். அங்கு சென்ற பலர் இப்போது நாட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தைப்பெற முடியும். வடக்கு மாகாணத்தில் என்ன வளம் இல்லை? இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்திலுள்ளது போன்று வளங்கள் ஏனைய மாகாணங்களில் இல்லை. ஆனால் அதை உரிய வகையில் நாங்கள் பயன்படுத்தத் தவறியிருக்கின்றோம்.

விவசாயமும், கடற்றொழிலும் எமது மாகாணத்தின் முக்கியமான பொருளாதாரத் தூண்கள். அவை இரண்டையும் சார்ந்த தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த உற்பத்திப் பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாகவும் மாற்றியமைக்க முடியும், என்றார் ஆளுநர்



# விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக் கள கொடுப்பனவை பரிசீலிக்கவும்

## வட மாகாண ஆளுநர் அறிவுறுத்தல்



(பு.கஜிந்தன்)

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்கள கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை காலை (15) நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் வரவுப் பதிவேட்டு இயந்திரத்தில் கையொப்பமிடுவது தொடர்பான விவகாரம் ஆராயப்பட்டு ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக தீர்வு காணப்பட்டது. மாதத்தில் 14 நாள்கள் வெளிக்கள கடமையில் ஈடுபடுவதுடன், பிரதி திங்கட்கிழமைகளில் வரவு பதிவேட்டு இயந்திரத்தில் கையெழுத்திட்டு அலுவலகக் கடமைகளாற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. அதேவேளை, விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்களப் பணிக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

அதேவேளை வெளிக்கள கடமைகளைச் சரிவரச் செய்யாத உத்தியோகத்தர்களுக்கும், தவறிழைத்ததாகக் கண்டறியப்படும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகளை காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

பதில் கடமையாற்றும் விவசாயப் போதனாசிரியர்களுக்கு அதற்குரிய கொடுப்பனவுகள் மற்றும் நிலுவைக் கொடுப்பனவுகளை விரைந்து வழங்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் விவசாயத்துறைசார் திட்டங்கள் தொடர்பில் மாகாண விவசாயத் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட திட்ட முன்னெடுப்பு நிறுவனங்கள் கலந்துரையாடவேண்டும் எனவும், அந்தத் திட்டத்தில் பணியாற்றும் வெளிக்களப் பணியாளர்களுக்கு கொடுப்பனவுகள் வழங் கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப்பணிப்பாளரை ஆளுநர் பணித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயப் போதனாசிரியர்களுக்கு இடையிலான இடமாற்றத்தை முன்னெடுக்க விவசாயப் போதனாசிரியர்கள் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக உரிய முறையில் அதைச் செயற்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

மேலும், ஒவ்வொரு கமநலசேவை நிலையங்களுக்கும் (ஏ.பி.சி.) மூத்த விவசாயப் போதனாசிரியர் ஒருவரை பொறுப்பாக நியமிப்பது தொடர்பிலும் அதற்குரிய பொறுப்புக்கள் தொடர்பாகவும் ஆளுநரால் பணிப்புரை வழங்கப்பட்டது. மேலும், சிறப்பாக பணியாற்றும் வெளிக்களப் பணியாளர்களுக்கு அவர்களுக்கான சேவைகளை மெச்சும் வகையில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் அறிவுறுதல் வழங்கினார்.

# குஞ்சுக்குளம் மல்வத்து ஓயாவில்

## காணாமல் போன இளைஞரை தேடும் பணி தொடர்கிறது



(எஸ்.ஆர்.லெம்பேட்)

மடு. பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பிரதேசத்தில் மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை (13) மாலை நீரில் மூழ்கி காணாமல் போயுள்ள நிலையில் குறித்த இளைஞரை தேடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் இணைந்து தேடிய போதும் நேற்று முன்தினம் (14) மாலை வரை குறித்த இளைஞன் மீட்கப்படவில்லை.

குறித்த இளைஞன் காணாமல் போனமை குறித்து மடு. பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மடு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த நிலையில் குறித்த இளைஞன் நீராடச் சென்ற பகுதிக்குச் சென்ற பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் தேடுதல்களை மேற்கொண்டனர்.

எனினும் இதுவரை குறித்த இளைஞன் மீட்கப்படவில்லை.

சம்பவத்தில் 23 வயதுடைய புஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நபர் கடந்த திங்கட்கிழமை (13) ஐந்து பேருடன் மடு தேவாலயத்திற்கு சென்றுவிட்டு மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற போதே நீரில் மூழ்கி மாயமானதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய காணாமல் போன நபரை கண்டறியும் நடவடிக்கையில் மடு பொலிஸார் அப்பிரதேச மக்களின் உதவியைப் பெற்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மேல் கொத்மலை நீர்தேக்கத்தில்

## ஆணின் சடலம் மீட்பு

(க.கிஷாந்தன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத் மலை நீர்தேக்கத்திலிருந்து நேற்று ஆணின் சடலம் ஒன்று மதியம் 3 மணியளவில் மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவத்தனர்.

சடலமொன்று மிதப்பதைக்கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஆண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரிழந்தாரா அல்லது நீர் தேக்கத்தில் பாய்ந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து நீர்தேக்கத்தில் எறிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மீட்கப்பட்ட சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை. சுமார் 30ற்கும் 40ற்கும் இடையிலான வயது மதிக்கதக்க ஆண் எனவும் மேலதிக விசாரணைகளை தொடர்வதாகவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



யாழ்ப்பாண மாவட்டச் செயலக வருடாந்த தைப் பொங்கல் நிகழ்வு நேற்று (15) காலை யாழ். மாவட்ட செயலக முன்றலில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன் உள்ளிட்ட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். **படங்கள் பு.கஜிந்தன்**

# யாழ். வல்லையில் மாபெரும் சர்வதேச பட்டப் போட்டி



யாழ்.வல்லை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும், வல்லை உதயசூரியன் கழகமும் இணைந்து நடத்திய வல்வெட்டித்துறையின் மாபெரும் வினோத விசித்திர சர்வதேச பட்டப்போட்டி உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

பிரதம விருந்தினரான ஆளுநர் உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டச் செயலராக 2018ஆம் ஆண்டு இருந்தபோது இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதை நினைவுகூர்ந்ததுடன் இந்த நிகழ்வு தொடர்ச்சியாக சிறப்பாக இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டார்.

எமது மண்ணின் பெருமைகளை பறைசாற்றும் வகையில் இந்தப் போட்டிகள் அமைந்துள்ளதாகத் தெரிவித்த ஆளுநர், இது பாராட்டப்பட வேண்டிய விடயம் எனவும் குறிப்பிட்டார்.

ஒவ்வொருவரதும் தனித்துவமான திறமைகளை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பமாக இந்தப் பட்டப்போட்டி அமைந்துள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் புதிது புதிதாக சிந்தித்து பட்டங்களை உருவாக்குவது சிறப்பானது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

நிகழ்வில் பல வகையான பட்டங்கள் மழைக்கு மத்தியிலும் போட்டியில் பங்கேற்றன. வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு ஆளுநர் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். அத்துடன் இந்த நிகழ்வில் கல்விச் சாதனையாளர்களையும் கௌரவித்தார்.

மேலும் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வல்வெட்டித்துறை நகர சபையின் செயலர் கிசோக்குமார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்

## தைப்பொங்கல் விழா



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தைப்பொங்கல் விழா நேற்று (15) காலை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில், மாவட்ட செயலக முன்றலில் குறித்த தைப்பொங்கல் விழா நடைபெற்றது.

கிளிநொச்சி பதில் மாவட்ட செயலாளர் எஸ்.முரளிதரன் தலைமையில் குறித்த விழா நடைபெற்றது.

இவ்விழாவில் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளிட்ட பதவி நிலை உத்தி யோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



பட்டிப்பொங்கல் விழாவை சிறப்பிக்கும் முகமாக கோமாதா உற்சவம் நேற்று யாழ்ப்பாணம் அன்ன சத்திரத்து ஞான வைரவர் ஆலய முன்றலில் அன்னசத்திரத்து ஞான வைரவருக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, கோ பூஜை, கோபவனி, பட்டிப்பொங்கல், கோமாதா கீர்த்தனைகள் என்பன இடம்பெற்றன. ஆலய பிரதம குரு ஸ்ரீ கந்தராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் கலந்து கொண்டார்.

**படங்கள் பு.கஜிந்தன்**

# மாவே சேதுங் நினைவிடத்தில் ஜனாதிபதி அஞ்சலி









# ஆற்றுவாய் வெட்டும் சிக்கல் எதிர்கொள்ளும் அபாய நிலை








- ஏ.எச்.ஏ.ஹுஸைன்

இயற்கை செயற்கை அழிவுகள் என்று எது நடந்தாலும் அவற்றால் முதலில் பாதிக்கப்படுவது கிராம மக்கள்.

கிராம மக்கள் என்று கூறும்போது அவர்களின் பொதுவான அடையாளமாக அவர்களின் இனத்தையோ, மதத்தையோ, மொழியையோ வைத்துப் பிரித்துப் பார்க்க முடியாது. ஏழ்மையும், அரசியல் பொருளாதார பலமின்மையுமே அவர்களின் பொதுவான அடையாளங்களாக இருக்கும்.

பொதுவாகவே இயற்கை வளங்களையே தமது ஜீவனோபாயத்துக்கு நம்பி வாழும் அவர்கள் பாதிக்கப்படுவதும் இயற்கை செயற்கை அழிவுகளால்தான்.

வடகீழ்ப் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிக்கும் செப்டெம்பர் பிற்பகுதிலிருந்து பெப்ரவரி வரையான காலம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கரையோர மக்களுக்கு அச்சமும் பீதியும் நிறைந்ததாகவே அமைந்துவிடுகிறது.

இக்காலப் பகுதில் மாரிகால பருவ மழை தொடங்கி விடுவதால் அதனால் உண்டாகும் அழிவுகளுக்காகவும் மக்கள் கிலி கொள்ளத் துவங்கி விடுவார்கள்.

சூறாவளி, புயல் காற்று, தாழமுக்கம், கன மழை, அடை மழை, பெருவெள்ளத்தினால் மக்கள் தமது இயல்பு வாழ்க்கையிலிருந்து முடங்கி விடுவது ஒரு புறமிருக்க, இடப் பெயர்வுகள், உயிரிழப்புக்கள், வாழ்வாதார இழப்புக்கள். வீடு வாசல் சொத்துடமை இழப்புக்களும், அகதி வாழ்வு நிலைமை என்பனவும் ஏற்பட்டு விடுகின்றன.

இது வருடாவருடம் தொடர் கதையாகவே மாறி விடுகிறது.

குறிப்பாக நவம்பர் டிசெம்பர் காலப் பகுதிகளில் பருவகால இயற்கை தனது வீரியத்தைக் காட்டத் தொடங்கிவிடும்.

கொட்டும் மழையும் பாரிய வெள்ளமும் மக்களை அல்லோலகல்லோலப்படுத்தும்.

மக்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றி ஜீவனோபாயத்தையும் கேள்விக்குள்ளாக்கும்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மக்களின் வாழ்வாதாரம் பிரதானமாக விவசாயத்தையும் மீன்பிடியையும் கூடவே சேனைப்பயிர், கால்நடைகள் குடிசைக் கைத்தொழில்கள் வியாபாரம் என்பவற்றை நம்பியே காணப்படுகிறது. ஆனால், சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் நாளாந்த சீவியம் மிகமோசமாகப் பாதிக்கப்படுகிறது.

விவசாயக் குடும்பங்களின் நிலை இவ்வாறிருக்க, தினமும் கூலி வேலைக்குச் சென்று தமது வயிற்றைக் கழுவும் அன்றாடங் காய்ச்சிகள் பட்டினியால் வாடி அல்லோலகல்லப்பட்டுப்போய் என்ன செய்வது என்று புரியாதவர்களாய் திகைத்துப்போய் நிற்பதுண்டு.

மீன்பிடியை நம்பி வாழும் குடும்பங்களின் நிலையும் கடல் கொந்தளிப்பு தாழமுக்கம், கடும் காற்று என்பனவற்றால் சிரமமாகிவிடுகிறது. இந்நிலையில் மீனவர்களுக்குக் கைகொடுப்பது உள்ளூர் வாவிகளும் ஆறுகளும்தான்.

விவசாயிகளும் மீனவர்களும் பண்ணையாளர்களும் ஆறுகளையும் குளங்களையும் நம்பி வாழ்வோராகும்.

கடல், வாவி, குளம், ஆறு என்பனவற்றோடு தொடர்புபட்டதாக மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம், பெரிய கல்லாறு ஆற்றுவாய் என்பன முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளன.

இந்த முகத்துவாரத்தினூடாகத்தான் மலையகத்திலிருந்தும் மகாவலி கங்கையின் கிளைகளிலிருந்தும் பெருக்கெடுத்து அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களை அடையும் காட்டு நீர் கடலுடன் சேர்கிறது.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லடி, பெரிய கல்லாறு ஆகிய இடங்களிலுள்ள ஆற்றுவாய்களை (இயற்கையாக எழுப்பப்படும் மணல் மேடு) வெட்டி கடலுடன் கலக்க வைப்பதில் வருடாவருடம் சர்ச்சைகள் எழும்புகின்றன. இதில் அரசியல் அதிகாரங்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

என்ன பிரச்சினை? பெருக்கெடுத்து வரும் காட்டு நீர் மட்டக்களப்பு வாவியில் தேங்குவதால் வாவியை அண்டியுள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் விவசாயச் செய்கைகள் பாதிப்படைகின்றன.

ஆற்று வாயை வெட்டி காட்டு நீரை கடலுடன் கலக்க விட்டால் வாவி வறண்டு விடும் அதனால் பாதிப்புக்கள் வரும் என்பது ஒரு சாராரின் வாதம். ஆனால் பாதிக்கப்படும் விவசாயிகள் அதனை மறுக்கின்றனர்.

இயற்கை நீரோட்டத்தை முகாமைத்துவம் செய்வதில் அரசியல் அதிகாரங்கள் கலக்க வேண்டாம் என்பது அவர்களின் வாதம்.

இதற்கு உதாரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு ஒரு சம்பவம் நடந்தது.

மழை வெள்ளம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் கரைவாகுப்பற்று, நற்பிட்டிமுனை, கிட்டங்கி, நாவிதன்வெளி போன்ற பகுதிகளில் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமது செய்கை நிலங்கள் முழுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்படுவதால் அதனை காப்பாற்றுமாறு அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட நிருவாகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சேனைக்குடியிருப்பு, மணல்சேனை நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய வயல் பிரதேசங்களும் மேலும் கல்முனைக் கண்டம், நற்பிட்டிமுனை கீழ்–மேல் கண்டம், ஏத்தாளை நீண்டகரை, பண்டித் தீவு, சேவகப்பற்று, மண்டூர் எல்லை போன்ற கண்டங்களிலுள்ள 5000 ஏக்கருக்கு மேற்பட்ட நெற் காணிகளில் பெருக்கு நீர் வடிந்தோட முடியாத நிலையில் அறுவடை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் அதன் எதிரொலியாக மட்டக்களப்பு முகத்துவாரம் பெரிய கல்லாறு ஆற்றுவாய்களை பலாத்காரமாக வெட்டும் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான சிறிலங்கா பெரமுன கட்சியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட 2ஆம் இலக்க வேட்பாளர் கீர்த்திசிறி விஜயசிங்க உட்பட 33 பேர் கைதாகி பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

மட்டக்ளப்பு மாவட்டத்திலுள்ள ஆற்றுவாய் எனப்படும் பெரியகல்லாறு ஆற்றுவாய். மற்றும் கல்லடி முகத்தவாரம் ஆற்றுவாய் என்பனவற்றை அவர்கள் பலாத்காரமாக வெட்டினர் என்பதே அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும்.

எனவே. தற்போதும். குளங்கள், சமுத்திரங்கள் திறந்து விடப்பட்டள்ளதாலும் மழை பெய்து வருவதாலும் ஆற்றுவாய் வெட்டும் பிரச்சினைகள் மீண்டும் எழாமலிருக்கத் தோதான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இயற்கையால் எழும் இத்தகைய இடர்பாடுகளைத் தீர்க்க எதாவது இயங்கியல் வழிமுறைகள் கண்டாகப்பட வேண்டும். இதற்கு அதிகாரிகள் துறைசார்ந்தோர் ஆவன செய்ய வேண்டும்.

## புத்தளத்தில்

# 2137 சங்குகளுடன் ஒருவர் கைது



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், கற்பிட்டி – பராமுன கடல் பிரதேசத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட ஒருதொகை சிறிய சங்குகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (14) கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேற்கு கடற்படைக்குச் சொந்தமான விஜய கடற்படையின் விஷேட ரோந்து கப்பல் கற்பிட்டி – பராமுன பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போது, குறித்த கடல் பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திர படகு ஒன்றை பரிசோதனை செய்தனர்.

இதன்போது, குறித்த டிங்கி இயந்திர படகில் 7 சென்றி மீற்றர் அளவு கொண்ட சிறிய அளவிலான சங்குகள் இருந்துள்ளமை அவதானித்துள் ளனர்.

குறித்த படகில் 15 உர மூடைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 2137 சிறிய அளவு கொண்ட சங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கற்பிட்டி, மண்டலகுடா பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட சிறிய சங்குகள், டிங்கி இயந்திர படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கடல் தொழில் நீரியவள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

# ஐந்து வருடங்களாக மூடிக்கிடக்கும் ஹோட்டலுக்கு இணையம் மூலம் பதிவு

## ஏமாந்தார் இத்தாலி நாட்டவர்

(ரஸீன் ரஸ்மின்)

சுற்றுலா நிமித்தம் இலங்கைக்கு வருகை தந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஒருவர், கற்பிட்டி பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்காக இணையத்தில் விடுதி ஒன்றை பதிவு செய்துவிட்டு, அங்கு வந்து பார்த்த போது குறித்த ஹோட்டல் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதாக அவர் கற்பிட்டி பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் (13) முறைப்பாடு செய்துள்ளார்.

இதுபற்றி விசாரித்த போது, அந்த ஹோட்டல் ஐந்து வருடங்களாக மூடிக் கிடப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், இது தனக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளதாகவும் அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

கற்பிட்டி – தேதாவாடி பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியில் தங்குவதற்காகவே குறித்த சுற்றுலா பயணி இணையத்தில் விடுதியொன்றை முன் பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தான் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக இந்த சுற்றுலா பயணி கற்பிட்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா விடுதிகளை முன்பதிவு செய்யும் இணையதளம் மூலம் இந்த ஹோட்டலை தேர்வு செய்துள்ள அவர், 72ஆயிரம் ரூபாவை முன்பணமாக இணையத்தில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்த வெளிநாட்டு பிரஜை பணத்தை இணையத்தில் செலுத்தாமல் நேரில் வந்து செலுத்துவதாக கூறியுள்ளார்.

எனினும், குறித்த ஹோட்டலுக்கு வருகை தந்து பார்த்த போது, அந்த ஹோட்டல் கடந்த 5 வருடங்களாக பூட்டியே கிடப்பதாக தகவல் கிடைத்துள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த வெளிநாட்டு பிரஜைக்கு கற்பிட்டி பொலிஸாரினால் உதவியால் ஹோட்டல் ஒன்றில் வாடகைக்கு அறையொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இன்று நீர் விநியோகம் தடை

கொழும்பின் சில பகுதிகளில் 12 மணித்தியாலங்கள் நீர் விநியோகம் தடை செய்யப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பிற்கு நீர் வழங்கும் பிரதான குழாய்த்திட்டத்தில் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று (16) மாலை 6.00 மணி முதல் நாளை (17) காலை 6.00 மணி வரை 12 மணி நேரம் நீர் விநியோகம் தடை செய்யப்படவுள்ளதாக அந்த சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளுக்கான நீர் விநியோகம் இவ்வாறு தடை செய்யப்படவுள்ளது.

# கிழக்கு ஆளுநரின் கண்காணிப்பு களவிஜயம்

(ஏ.எச் ஹஸ்பர்)



கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் பழுதடைந்த வாகனங்களை கண்காணிப்பு செய்யும் நோக்கில் களவிஜயமொன்றை கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர நேற்றுமுன்தினம் மேற் கொண்டிருந்தார்.

கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள பல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சொந்தமான வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களையும் உரிய அதிகாரிகளையும் இதன் போது இதன் பராமரிப்பு தொடர்பிலும் அறிவுறுத்தப்பட்டது. இது தொடர்பில் கருத்துரைத்த ஆளுனர் இது எல்லாம் அரசாங்க பணம் இதனை மீள திருத்தி பயன்படுத்த முடியுமாக இருந்தால் பயன்படுத்த வேண்டும் என்றார்.

# புத்தளம் சாஹிராவின் பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகிகள்

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் சாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் அதிபர் ஐ.ஏ. நஜீம் தலைமையில் சாஹிரா தேசியக் கல்லூரியின் அஸ்வர் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.எம். ஜவாத், புத்தளம் ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் இசட்.ஏ. சன்ஹீர், சாஹிரா கல்லூரியின் முன்னாள் உதவி அதிபர் எம்.எம்.எம்.நதீர் ஆகியோரும் இதன்போது சமூகம் அளித்திருந்தனர். நிர்வாகக்குழு கலைப்புடன் புதிய நிர்வாக குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பதவி வழியாக அதிபர் ஐ.ஏ. நஜீம் தலைவராக நியமிக்கப்பட்டார். கலாநிதி எஸ். ஆர்.எம். சராபாத்துல்லாஹ் செயலாளராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏ.ஜே.எம். இல்ஹாம் உப தலைவராகவும், உப செயலாளராக எம்.எப்.ஆசிப் ரிழாவும், எஸ்.எஸ்.தில்ஹசன் பொருளாளராகவும், எம்.ஆர்.எம்.ஷாமில் உப பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். இஸட்.ஏ.சன்ஹீர் போஷகராகவும், ஏ.ஜே.எம். இனூஸ், எம்.எஸ்.ரில்வான், எம்.டி ரினாஸ் அஹமத், எம்.ஐ. அஸ்லம், எம்.என்.ஏ. பாதீர், எஸ்.என்.எம்.ரியாஸ், எஸ்.எம். பஹ்மி, ஏ.சீ.எம். இம்தியாஸ், எம்.எம். இஹ்திஸாம், ஏ.எம். அஸ்ரின், ஏ.எல்.எம். சித்தீக் கான் ஆகியோர்கள் செயற் குழு உறுப்பினர்களாக. தெரிவு செய்யப்பட்டனர்.

## வாகனத் தரிப்பிடங்களை நிர்வகிக்கும்

# 26 நிறுவனங்கள் மீது விசாரணை ஆரம்பம்

கொழும்பு மாநகர சபையின் கீழ் வாகனத் தரிப்பிடங்களை நிர்வகிக்கும் 26 நிறுவனங்கள், மாநகர சபைக்கு சுமார் 27 மில்லியன் ரூபாய் நிலுவை வைத்துள்ளமை தொடர்பில் இலஞ்சம் , ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மாநகர ஆணையாளர் அறிக்கையொன்றைக் கோரியுள்ளதுடன், அறிக்கையில் உள்ள சான்றுகள் மற்றும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை கருத்திற்கொண்டு முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. மோசடி, ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான பிரஜைகள் இயக்கத்தினால் இந்த விடயம் தொடர்பான முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த 26 நிறுவனங்களும் 2023 இல் ஏறத்தாழ 204,164,110 ரூபாய் கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடங்களுக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், அந்த நிறுவனங்கள் 2024 இல் மீண்டும் வாகன நிறுத்துமிடங்களின் நிர்வாகத்தைப் பெற்றுள்ளன.

அந்த முறைப்பாட்டில், குறித்த நிறுவனங்கள் 2024 ஏப்ரல் இறுதிக்குள் கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவை கிட்டத்தட்ட ரூ. 264,859,471 ஆகும். மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மை இல்லை என தெரிவித்து, சிவில் சமூக குழுவானது, விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தது.

# மூதூர்-கூனித்தீவில் பட்டிப்பொங்கல்









(எம்.என்.எம்.புஹாரி)

மூதூர் –கூனித்தீவு பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் பட்டிப்பொங்கலை கால்நடை பட்டிகளில் பொங்கல் பொங்கி நேற்று (15) கொண்டாடினர். இதன்போது பட்டிகளிலுள்ள மாடுகளுக்கு திருநூர் சாத்தி, கழுத்துகளில் பூமாலை இட்டு பலகாரம் செய்து தொங்கவிட்டிருந்ததையும் காணமுடிந்தது. அத்தோடு பட்டிகளில் பொங்கல் பொங்கி குடும்பத்தோடு பட்டிப் பொங்கலை மூதூர் கால்நடை வளர்ப்பாளர்கள் கொண்டாடியதையும் காணமுடிந்தது.

# அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று 16ம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. திகாமடுல்ல மாவட்டநாடாளுமன்ற உறுப்பினரும், அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஏ.ஆதம்பாவா தலைமையிலும், பிரதேச செயலாளர் பீ.டி.எம்.இர்பான் ஒருங்கிணைப்பிலும் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவர்கள், பொறுப்பாளர்கள், அதிகாரிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், திட்ட முன்மொழிவுகள் மற்றும் கடந்த கால வேலைத்திட்டங்களின் மதீப்பிடுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. புதிய அரசாங்கத்தின் கீழ் இடம்பெறும் முதலாவது அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்ற அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட பல தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஐஸ் போதைப்பொருளுடன் தம்பதியினர் கைது

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்)

தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்திற்கு இணைவாக அநுராதபுரம் தலைமையக பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 30 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் தம்பதியினரை கைது செய்துள்ளனர். தற்போது வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள டுபாய் சுத்தா என்ற நபரே இந்த போதைப் பொருள் கடத்தலை முன்னெடுத்து வருவதாகவும் கைது செய்யப்பட்ட தம்பதியினர் எப்பாவல பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்களிடமிருந்து கண்டு பிடிக்கப்பட்ட ஐஸ் போதைப் பொருள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.மேலும் சந்தேக நபர்களான தம்பதியினரும் முச்சக்கர வண்டியும் மேலதிக விசாரணைகளின் பின்னர் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் தலைமையக பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா







அநுராதபுரம் மரதன்கடவல இஹலப்புளியங்குளம் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அந்நஹ்லா கல்வி மத்திய நிலையத்தில் நடைபெற்றது. அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் அதிபர் எம்.ஆர்.எம்.ரனீஸ் மற்றும் அந்நஹ்லா அஹதிய்யா தலைவர் பீ.ஜாயிஸ் (உஸ்வி) ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அதிதிகள் சான்றிதழ் வழங்குகினார்கள்.

(படங்கள் : - அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்)

# மட்டக்களப்பில் தொடர் மழை
# வயல்களும் தாழ்நிலங்களும் நீரில் மூழ்கின
## போக்குவரத்து பாதிப்பு





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக தாழ்நிலங்களும்,வயல் நிலங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள போரதீவுப் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, மண்டூர் கமநல சேவை நிலையத்துக்குட்பட்டு செய்கை பண்ணப்பட்டுள்ள பெரும்போக வேளாண்மை செய்கையில் 6000 ஏக்கருக்கும் அதிகமாக செய்கை பண்ணப்பட்டுள்ளன. அவற்றில் மண்டூர், வெல்லாவெளி, வேத்துச்சேனை, பாலையடிவட்டை, காக்காச்சிவட்டை போன்ற பல்வேறு பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்த மழை வீழ்ச்சி காரணமாக நவகரி குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ள தாகவும், தற்போது வேளாண்மை 70 நாட்கள் பயிராக காணப்படுவத னால், குடலைப்பருவத்தில் இருந்து கதிர்பருவத்திற்கு மாறும் இவ் வேளையில் இவ்வாறு அதிகரித்த மழை வீழ்ச்சி மற்றும் குளங்களிலிருந்தும் நீர் திறந்து விடப்பட்டுள்ளதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இதேவேளை, மண்டூர் வெல்லாவெளி பிரதான வீதியை ஊடறுத்து வெள்ளநீர் பாய்ந்து வருகின்றது. இதனால் அவ்வீதியுடனான போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறித்த வீதியூடாக இவ்வாறு வெள்ள நீர் ஊடறுத்துச் செல்வதனால் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள் பொதுமக்கள் என பலரும் அச்சத்துடனேயே பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது பெய்து வரும் அதிக மழைவீழ்ச்சியால் மாவட்டத்திலுள்ள சிறு குளங்கள் நிரம்பி வழிவதுடன், மிகப்பிரதான பெரிய குளங்களான நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 31.5 அங்குலம், உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 32 அடி 2 அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 17அடி 4 அங்குமாகவும் உயர்ந்துள்ளதாகவும், அக்குங்களிலிருந்தும் மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருவதாகவும் அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசன பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இவ்வருடம் 2025.01.01 ஆம் திகதியிலிருந்து வியாழக்கிழமை 2025.01.15 ஆத்திகதி காலை 8.30 மணிவரையில் 159.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கடந்த 2024 ஆம் ஆண்டு 1974.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலைய அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்





(கியாஸ் ஷாபி)

கந்தளாய், கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (14) வழங்கி வைக்கப்பட்டன. 30 பாடசாலைகளைச் சேர்ந்த, 800 மாணவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. குயஅடைநைள சுநடநைக ளுசஎ டுயமெய வுசரளவ மற்றும் கிராமிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பு ஆகிய நிறுவனங்கள் இதற்கான அனுசரணையை வழங்கியிருந்தது. இந்நிகழ்வு கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் பிரதி அதிபர் ஜே .எம். அஸார் தலைமையின் கீழ் நடைபெற்றது.

# “எங்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயலாகும்”

## திருகோணமலை மாவட்ட தனியார் பஸ் வரையறுக்கப்பட்ட சங்கம்



(ஏ.எச்.ஹஸ்பர்)

பஸ்களுக்கு அலங்கார பொருட்களை பொருத்துவது தடை செய்யகோருவது வாழ்வாதாரத்தை அழிக்கும் செயல் என திருகோணமலை மாவட்ட தனியார் பஸ் வரையறுக்கப்பட்ட சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் திங்கட்கிழமை திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்ற சங்க கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவித்த பஸ் உரிமையாளர் ஒருவர் கருத்து தெரிவித்தபோது, ஆபத்தை ஏற்படுத்தும் என்றால் அந்த மேலதிக பொருட்களை தடை செய்யலாம். சாதாரணமாக வரும் வருமானத்தை விட விசேட சேவை மற்றும் சுற்றுலா சேவை மூலமாக கிடைக்கும் வருமானமே அதிகம். வாகனத்தை விசேட தேவைக்கு பயன்படுத்தும்போது ஆசன இருக்கை மற்றும் அதன் அலங்காரத்தைப் பொறுத்தே முன்னுரிமைப்படுத்தி விசேட பயணங்களுக்கு பதிவு செய்வார்கள்.

அலங்காரமில்லாத பஸ்களில் மரண வீட்டுக்கு செல்வது போன்ற எண்ணம் வருவது என்பதால் யாரும் விசேட பயணத்துக்காக முன் பதிவு செய்யமாட்டார்கள்.

வாகனத்தில் உள்ள வெள்ளிரும்பு, தொலைக்காட்சி, மின்குமிழ் போன்றன மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் உள்ளன. எமது தொழிலை செய்து கொண்டு செல்கிறோம்.

இதை விடுத்து அரசாங்கம் மேலதிக பொருட்களை அகற்ற சொல்வதானது எமது வாழ்வாதரமும் அழிக்கப்படுவதுடன் அலங்கார வெள்ளிரும்பு பொருட்களை விற்பனை செய்பவர்களின் வாழ்வாதாரமும் அழிக்கப்படுகின்றன. இதனால் வருமானமிழக்கப்படுகிறது. குறித்த கலந்துரையாடலில் பஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# செட்டிபாளையம் கண்ணகை அம்மன் தைக்குளிர்த்தி சடங்கு



(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு செட்டிபாளையம் கண்ணகை அம்மன் தைக்குளிர்த்தி சடங்கு செவ்வாய்க்கிழமை(14) நடைபெற்றது.

செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் வருடம் தோறும் இடம்பெறும் பிரதான சடங்குகளில் தைக்குளித்தி சடங்கும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைகின்றது.

அந்தவகையில் தைப்பொங்கல் தினத்தில் மாலைவேளையில் நெல்லுக் குற்றுதல் பூஜையுடன் ஆரம்பமாகி விநாயகர்பானை வைத்தல், அம்மன் குளிர்த்திப்பாடல் பாடுதல் போன்ற பாரம்பரிய பத்ததி முறைப்படி அம்மனின் திருக்குளிர்த்தி இடம்பெற்றது.

ஆலய கட்டாடியார் தேவராசாவின் தலைமையில் நடைபெற்ற இச் சடங்கின்போது அப்பகுதியைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

# மனித மேம்பாட்டு அமைப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மனித மேம்பாட்டு அமைப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவானது ரிலெக்ஸ் பூங்காவில் கடந்த வாரம் நடைபெற்றது.

அமைப்பின் பணிப்பாளர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லமின் தலைமையிலும் செயலாளர் ஐ. பாத்திமா நஸ்லாவின் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்றது.

இந்நிழ்வுக்கு அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் ஐ.எல்.எம். இர்பான், அமைப்பின் ஆலோசகர்களான மேஜர். கே.எம். தமீம், கெப்டன். எம்.டி. நௌஷாத், எம்.அஸ ீஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம். சம்சுதீன், எம்.எஸ்.அகமட், சிராஜ்ஜன் முனீரா, அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் என பலரும் பங்கேற்றனர்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாக அமைப்போடு இணைந்து பணியாற்றிய அமைப்பின் பிரதேச அமைப்பாளர்கள், துறை சார்ந்த தலைவர்கள், உயர்பீட உறுப்பினர்களுக்கு நியமன ஆணைப்பத்திரம், அடையாள அட்டை, உத்தியோகபூர்வ சீருடை என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# சட்டவிரோத மண் அகழ்வை தடுக்க இணைந்த செயற்பாடு அவசியம்

## மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் அருண்

(கியாஸ் ஷாபி)

சட்ட விரோத மண் அகழ்வு நிறுத்தப்பட வேண்டும். அதனைத் தடுப்பதற்கு பொலிஸ், சூழல் அதிகார சபை, பிரதேச செயலாளர் ஆகியோர் இணைந்து செயலாற்ற வேண்டும். சட்டவிரோதமான எந்தவொரு செயற்பாடும் இடம்பெறக்கூடுதென வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறை பிரதியமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று (15) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி நெறியாள்கையின் கீழ், ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது. வெளி விவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறை பிரதியமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான அருண் ஹேமச்சந்திர தலைமை தாங்கினார். இந்தக் கூட்டத்தில், கிண்ணியா பிரதேச செயலக பகுதியில் உள்ள பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் குறைபாடுகள் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. முக்கியமாக கரையோர பிரதேசங்களில், கண்டல் தாவரங்களை, பொதுமக்கள் வேலி போட்டு, காணிப்பிடிக்கின்ற பிரச்சினையும் கரையோரங்களில் அனுமதியின்றி, கட்டடங்களை அமைப்பது தொடர்பாகவும், இங்கு விரிவாக ஆராயப்பட்டன.மேலும் கிண்ணியா நகர சபை பிரிவு உட்பட்ட பகுதியில், சீரான மீன் சந்தை உண்டு இல்லாது தொடர்பாகவும் இங்கு பேசப்பட்டது.

மேலும், குறிஞ்சாக்கேணி பாலம் அமைப்பதற்கு சகல பூர்வாங்க வேலைகளும் நிறைவு பெற்றுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் இங்கு தெரிவிக்கப்பட்டது. கிண்ணியா நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகவும் இங்கு பேசப்பட்டது. கிண்ணியா பிரதேச வைத்தியசாலைகளை தரம் உயர்த்துவது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூபினால் யோசனை முன்வைக்கப்பட்டது.

நாலு வருடங்களுக்கு முன் இடம்பெற்ற குறுஞ்சாக் கேணிபால அனர்த்தத்தின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு இன்னும் கொடுக்கப்படாமை குறித்தும் இங்கு அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக மனித யானை மோதல், வீதி அபிவிருத்தி , இயற்கை அனர்த்தத்தின் போதான வடிகான் நிலவரம், சட்ட விரோத மண் அகழ்வு, வடிகான்கள், கல்வி சுகாதாரம் என பல முக்கிய தீர்மானங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. குறித்த கூட்டத்தில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மகரூப், எஸ். குகதாஸன். பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட திணைக்கள பொறுப்பதிகாரிகள் துறைசார் அரசாங்க உத்தியோகத்தர்கள்

# முறையற்ற வகையில் தமிழர்களின் காணி பங்கீடு

## கிழக்கு ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு



(எஸ்.கீதபொன்கலன்)

இறக்காமம் பிரதேச செயலகப்பிரிவின் மாணிக்கமடு,மாயக்கல்லிமலை பகுதியிலுள்ள 24 ஏக்கர் வயற்காணிகள் 10 தமிழர்களுக்கு சொந்தமானதென 1972 ஆம் ஆண்டு அன்றைய அரசினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

தற்போது முறையற்ற வகையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளது.இதனை மீளவும் உரிய தமிழ் மக்களுக்கு வழங்க உதவுமாறு கேட்டு நேற்று(15) பிரதேச மக்கள்,கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவிடம் கோரிக்கை மகஜரை கையளித்துள்ளனர்.

1954 ஆம் ஆண்டு எமது மூதாதையர்கள் காடுகளை வெட்டி,நெற் பயிர்செய்கை செய்யத்தொடங்கினர்.இக்காணிகளுக்கு 1972 ஆம் ஆண்டு அரசினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இங்கு பயிர்ச்செய்கை செய்யப்பட்டன.இந்நிலையில் 1990 இல் பிரதேசத்தில் கலவரம் ஏற்பட்டது.நாங்கள் இடம்பெயரவேண்டி ஏற்பட்டது.இந் நிலையில் 1995 ம் ஆண்டில் சொந்த இடங்களுக்கு திரும்பினோம்.

மீளவும் எமது வயற்காணிகளுக்கு சென்றோம். ஆனால் அக்காணிகள் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. எங்களிடம் அரசாங்கம் வழங்கிய அனுமதிப்பத்திரங்கள் உள்ளன.நிச்சயமாக ஆளுநர் நீதியான தீர்வை எமக்கு தருவார் என நம்புகின்றோம் என ஆளுநரை சந்தித்த பிரதேச மக்கள் கூறினர்.

# எல்ல வரையான இ – டிக்கெட்டுகள் அதிக விலைக்கு விற்பனை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

வெளிநாட்டினரின் கவனத்தை ஈர்த்த மலையக புகையிரதத்தின் எல்ல வரை செல்லும் புகையிரத இ-டிக்கெட்டுகள் இணையத்தில் வெளியாகி, 42 வினாடிகளில் அனைத்து டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்துவிடுவதாகவும் அவை தொடர்பில் பாரியளவிலான மோசடி ஒன்று முன்னெடுக்கப்படுவதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்குறித்த விடயத்தை வெளிப் படுத்திய பிரதி அமைச்சர், குறித்த பயண சீட்டுக் கடத்தல் தொடர் பில் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளதாகவும் வலியுறுத்தினார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் இணைத் தலைவர்களான அமைச்சர் கே.டி.லால்காந்த மற்றும் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன் தலைமையில் நேற்று (15) கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த,போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன.

2000 ரூபா பெறுமதியான பயணச்சீட்டை 16000 ரூபாவிற்கு வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் குழுக்கள் அனைத்து பயண சீட்டு களையும் உடனடியாக கொள்வனவு செய்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கொழும்பு – கோட்டை – கண்டி மற்றும் எல்ல புகையிரத நிலையங்களை மையப்படுத்தி அதிக விலைக்கு புகையிரத பயணச்சீட்டுகளை விற்பனை செய்யும் மோசடி இடம்பெற்று வருவதாகவும், புகையிரத நிலைய வளாகத்தில் முச்சக்கரவண்டிகளை நிறுத்துபவர்கள் அதற்கான உதவிகளை பெற்று வருவதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

புகையிரத திணைக்களம் சம்பந்தப்பட்ட திகதிக்கு செல்லுபடியாகும் இ-டிக்கெட்டுகளை ஒரு மாதத்திற்கு முன்பே இணையத்தில் வெளியிடுவதாகவும், அவை வெளியாகும் வரை காத்திருக்கும் வேளையில், அனைத்து டிக்கெட்டுகளும் 42 வினாடிகளில் விற்றுத் தீர்ந்து விட்டதாகவும் கூறினார்.

விசேட கணினி அறிவுள்ள ஒருவரோ அல்லது குழுவோ இதனைச் செய்வதாக சந்தேகம் இருப்பதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக விசாரணை நடத்த, புகார் அளிக்கும் நபரை நீதித்துறை நடவடிக்கையில் ஈடுபடுத்த வேண்டும் என்றும், அதிக விலை கொடுத்து பயணச்சீட்டு வாங்குபவர்கள் இது குறித்து குற்றம் சாட்டுவதாகவும், ஆனால், உதவி இல்லாமல் சட்ட நடவடிக்கை எடுப்பதை தவிர்ப்பது கடும் சிக்கலாக உள்ளது என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

# யாழில் நல்லிணக்க பொங்கல்



(பு.கஜிந்தன்)

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன், யாழ்ப்பாணம் மாவட்ட சர்வ மதக் குழு உறுப்பினர்களும், ஸூமூனே நிறுவனத்தினரும் இணைந்து நடாத்திய தைப்பொங்கல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் – சுண்டுக்குழியில் உள்ள ஸூமூனே அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக கேதீஸ்வரசர்மா குருக்களும், அருட்தந்தை அருட்பணி. செபஸ்ரியாம்பிள்ளை அன்ஸ்லி றொஷான் அடிகளாரும், மௌலவி அஸ்லம் அவர்களும் இணைந்து சிறப்பித்தனர்.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இன– மத பாகுபாடின்றி ஒரே குடும்பமாக இணைந்து பொங்கல் பொங்கினர்.

நிகழ்வின் இறுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதக் குழுவின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலை யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஜெனசி ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். நாகர்கோவிலில்

# கரை ஒதுங்கிய விசித்திர படகு





பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் மர்ம வீடு போன்ற படகு ஒன்று கரை ஒதுங்கி உள்ளது.

அண்மைக்காலமாக கடல் நிலையில் மாற்றங்களி னால் கடல் சீற்றங்கள் சூறாவளி மற்றும் நிலநடுக்கம் போன்றவை பல தென் கிழக்கு ஆசியா நாடுகளில் ஏற்பட்டன. இதன்போது மியன்மார், தாய்வான், தாய் லாந்து, மலேஷியா, இந்தியா, போன்ற ஏதாவது ஒரு நாட்டிலிருந்து இது வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. குறித்த வீட்டில் பௌத்த சமயத்தினை தாங்கிய பல மரபு அம்சங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. குறித்த வீட்டினை பார்வையிடுவதற்கு பல மக்கள் சென்றவண்ணமுள்ளனர்.

# தேசிய மக்கள் சக்தியின் நிர்வாக காரியாலயம் திறப்பு

(பு.கஜிந்தன்)




தேசிய மக்கள் சக்தியின் நிர்வாக காரியாலயம் வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரனால் நேற்று (15) திறந்து வைக் கப்பட்டது.

பிரதேச இணைப்பாளர் மாடசாமி செல்வ ராசா தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் த.தங்கரூபன், பிரதேச கடற்றொழில் சங்கங்களின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், மருதங்கேணி இலங்கை வங்கி முகாமையாளர், உட்பட கட்சியின் பிரதேச ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கிளிநொச்சி இரணைமடு குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறப்பு

## தாழ்நில மக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு



(பு.கஜிந்தன்)

தற்போது பெய்து வருகின்ற கனமழையால் அதிகளவான நீர் இரணைமடு குளத்துக்கு வந்து கொண்டிருக்கிறது.

குளத்தின் நீர்மட்டத்தின் அளவு தற்போது 36 அடி 10.5 அங்குலத்தைத் தாண்டி உள்ளதுடன் குளத்தில் 10.5 அங்குலம் வான் பாய்ந்து கொண்டிருப்பதால் குளத்தின் அனைத்து கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றது.

எனவே, குளத்தின் கீழ்ப்பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் கனமழை பெய்து வருகின்றமையால் மாவட்டத்தில் உள்ள சிறு குளங்களான கனகாம்பிகைக் குளம், வன்னேரி குளம், பிறமந்தனாறு குளம் ஆகியன வான் பாய ஆரம்பித்துள்ளன.

# நீதியமைச்சால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் இன்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும்.

இவை யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் விளிம்பு நிலையிலுள்ள மாணவர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இன்று (16) பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.



பேராதனை பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத் தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா–2025 பேராத னைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோயிலின் முற்றத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

படங்கள் : கண்டி நிருபர்







# கண்டாவளை கல்லாற்று பகுதியில் மணல் அகழ்வு

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் பல வருட காலமாக மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில் விரோதமாக அப்பகுதியில் தொடர்ச்சியாக இரவு பகலாக இயற்கை வளங்களை அளிக்கப்பட்டு மணல் அகழ்வு நடைபெற்று வருகிறது.



இது தொடர்பாக சம்பந்தப்பட்ட புதிய அதிகாரிகள் அசமந்த போக்குடனே காணப்படுவதாக மக்கள் தெரிவித்து வருகின்றனர் .

இது தொடர்பாக தற்போது புதிய அரசாங்கத்தின் செயல்பாடுகள் எவ்வாறு அமையப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என, மக்கள் தெரிவித்துள்ளனர் .

அத்தோடு, இவ்வீதி ஊடாக சட்டவிரோதமான முறையில் மணல் கொண்டு செல்வதன் காரணமாக இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.




# 3 போர்க்கப்பல்கள் இந்திய கடற்படைக்கு புதிதாக சேர்ப்பு







மூன்று அதிநவீன போர்க்கப்பல்களை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். பிரதமர் மோடி நேற்று காலை மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள கடற்படை கப்பல் கட்டும் தளத்திற்கு சென்றதுடன் அவருக்கு கடற்படை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர் நடந்த விழாவில் ஐ.என்.எஸ். சூரத், ஐ.என்.எஸ். நீலகிரி, ஐ.என்.எஸ். வக்ஷீர் ஆகிய மூன்று முன்னணி கடற்படை போர்க்கப்பல்களை அறிமுகப்படுத்தி நாட்டுக்கு அர்ப்பணித்தார். விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், கடற்படைத் தளபதி, மகாராஷ்டிரா முதல மைச்சர், துணை முதலமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்ட னர்.

விழாவில் பிரதமர் மோடி, இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம், கடற்படையின் புகழ்பெற்ற வரலாறு, சுயசார்பு இந்தியா இயக்கம் ஆகியவற்றிற்கு இன்று ஒரு மிகப் பெரிய நாள். சத்ரபதி சிவாஜி மகாராஜ் இந்திய கடற்படைக்கு புதிய பலத்தையும் புதிய தொலைநோக்குப் பார்வையையும் அளித்தார். இன்று அவரது புனித பூமியில் 21ஆம் நூற்றாண்டின் கடற்படையை வலுப்படுத்துவதில் மிகப்பெரிய பணியை செய்துள்ளோம். ஒரு நாசகார கப்பல், ஒரு போர்க்கப்பல் மற்றும் ஒரு நீர்மூழ்கிக் கப்பல் ஆகிய மூன்றும் ஒன்றாக கடற் படையில் சேர்க்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும். இவை மூன்றும் இந்தி யாவில் தயாரிக்கப்பட்டவை என் பது பெருமைக்குரிய விடயம். இன்றைய இந்தியா உலகின் ஒரு பெரிய கடல் சார் சக்தியாக வளர்ந்து வருகிறது என தெரி வித்தார்.

# பாரிஸ் ஒலிம்பிக் பதக்கம் தரமற்றது: இந்திய விளையாட்டு வீரர்கள் புகார்



பாரிஸ் ஒலிம்பிக் பதக்கம் தரமில்லாமல் இருப்பதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் இந்திய விளையாட்டு வீரர்கள் புகார் அளித்துள்ளனர்.

கடந்த 2024ஆம் ஆண்டு ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பாரிஸ் ஒலிம்பிக் நடைபெற்றது. இதில், இந்தியா ஒரு வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 6 பதக்கங்களை வென்றது. இந்தியாவின் துப்பாக்கிச்சுடுதல் போட்டியில் 2 பதக்கம் வென்றார் மனு பாகர். அதேபோல, 57 கிலோ மல்யுத்த போட்டியில் அமன் ஷெராவத் வெண்கலம் வென்று அசத்தினார்.

இந்த நிலையில், பதக்கம் வாங்கிய 4 மாதங்களில், அவை நிறம் மாறிவிட்டதாகவும், தரமற்ற பதக்கங்கள் வழங்கப்பட்டிருப்பதாக இந்திய வீராங்கனை மனு பாகர் குற்றம்சாட்டியுள்ளார். அதைப்போல, அமன் ஷெராவத்தும் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இது தொடர்பாக இருவரும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் புகார் அளித்துள்ளனர் அத்துடன் தரமுள்ள பதக்கங்களை தங்களுக்கு வழங்க வேண்டும் என்று முறையிட்டுள்ளனர்.

ஏற்கனவே, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள், பாரிஸ் ஒலிம்பிக் பதக்கங்களின் தரம் குறித்து புகார் அளித்துள்ளனர். தற்போது, இந்திய வீரர்களும் புகார் அளித்துள்ள நிலையில், இந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

பாரிஸ் பதக்கம் 450 கிராம் எடை கொண்டிருக்கும். அதன் மையத்தில் ஈபிள் டவரில் 18 கிராம் இரும்பு சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பதக்கங்களை மோனய் டி பாரிஸ் மற்றும் லக்ஷுரி ஜிவல்லர் ஜாமெட்எனும்பிரபலநிறுவனமும்இணைந்து தயாரித்துள்ளது. மொத்தம் 5,084 பதக்கங்களை பாரிஸ் ஒலிம்பிக்கிற்காக தயாரித்து கொடுத்துள்ளனர். தற்போது, தரமில்லாதவை என உறுதி செய்யப்பட்ட பதக்கங்களுக்கு பதிலாக, தரமுள்ள பதக்கங்களை வீரர், வீராங்கனைகளுக்கு கொடுக்க சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உத்தரவிட்டுள்ளது. இந்த வாரம் முதல் அதற்கான பணிகள் ஆரம்பிக்கும் என குறிப்பிடப்படுகிறது.

## சராசரி வாராந்த பணி நேரம்: இந்திய ஊழியர்கள் முதலிடம்

உலக அளவில் பொருளியல் ரீதியில் முதல் பத்து இடங்களைப் பெற்றுள்ள நாடுகளின் பட்டியலில், தொழிலாளர்களின் சராசரி உழைப்பு நேரத்தைப் பொறுத்தவரை இந்தியாதான் முதலிடத்தில் உள்ளது.

46.1 மணி நேரத்துடன் சீனா இரண்டாவது இடத்திலும், பிரேசில் 39, அமெரிக்கா 38, ஜப்பான் 36.6 மணி நேரத்துடன் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. அண்மையில் எல்.என்.டி நிறுவனத்தின் தலைவரான எஸ்.என். சுப்பிரமணியன் உலக அளவில் இந்தியா முதலிடத்துக்கு வரவேண்டுமானால் ஊழியர்கள் அனைவரும் வாரந்தோறும் 90 மணி நேரம் வேலை பார்க்க வேண்டுமென்று கூறியிருந்தார்.

இந்நிலையில், தான் மேலும் இலாப மடைய தொழிலாளர்கள் 90 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென அவர் கூறுவதாக பலரும் விமர்சித்திருந்தனர்.

சீன மக்கள் வாரந்தோறும் 90 மணி நேரமும், அமெரிக்கர்கள் 50 மணி நேரமும் வேலை பார்ப்பதாக சுப்பிரமணியன் தெரிவித்திருந்தார்.

மேலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஊழியர்களை வேலை பார்க்க வைக்க முடியும் என்றால் தமக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும் என்றும் அவர மேலும் தெரிவித்தார்.

# “இந்திரா பவன்” கட்டிடம் சோனியா காந்தியால் திறந்து வைப்பு




அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் இந்திரா பவன் என பெயரிடப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை மூத்த தலைவர் சோனியா காந்தி நேற்று திறந்து வைத்தார்.

வளர்ந்து வரும் காலத்திற்கு ஏற்பவும், எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டும், பல்வேறு நிர்வாக வசதிக்காகவும் கடந்த 40 ஆண்டுகளாக டில்லி அக்பர் சாலையில் இயங்கி வந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகம் கோட்லா சாலையில் உள்ள இந்திரா பவனுக்கு மாற்றப்படுவதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

லோக்சபா மற்றும் ராஜ்யசபா உறுப்பினர்கள் என மொத்தம் 400க்கும் மேற்பட்டோர் விழாவில் கலந்துக் கொண்டனர். இது புதிய முயற்சிக்கும், புதிய முன்னேற்றத்திற்கான தருணம் என காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகர்ஜுனா கார்கே, பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி எம்.பி.வதேரா மற்றும் காங்கிரஸ் கட்சியின் எம்.பி.க்கள், எம். எல்.ஏ.க்கள், கட்சியின் மூத்த தலைவர்கள், பிரதேச காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், நாடெங்கிலும் உள்ள காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் என பலரும் அந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கடந்த 47 ஆண்டுகளாக 24, அக்பர் சாலை வளாகத்தில் செயல்பட்டு வரும் அகில இந்திய காங்கிரஸ் கட்சி, தற்போது புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. இது வரலாற்றில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# கேரள பாடலாசிரியருக்கு ஹரிவராசனம் விருது



சபரிமலையில் இந்த ஆண்டுக்கான ஹரிவராசனம் விருது, பிரபல மலையாள பாடலா சிரியர் கைதப்புறம் தாமோதரன் நம்பூதிரிக்கு வழங்கப்பட்டது.

கேரள அரசும் திருவிதாங்கூர் தேவசம்போடும் இணைந்து கலைத்துறையில் சிறப்பாக பணிபுரிபவர்களுக்கு ஹரிவராசனம் விருது வழங்கி கௌரவித்து வருகின்றன. 2012இல் யேசுதாசுக்கு இந்த விருது வழங்கி ஆரம்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக வீரமணி ராஜு, எஸ்.பி.பாலசுப்ரமணியம், சுசீலா, சித்ரா, கங்கை அமரன் உள்ளிட்ட ஏராளமான பாடகர்கள் இந்த விருதை பெற்றுள்ளனர்.

தொடர்ந்து 14ஆவது ஆண்டு விருதாக சபரிமலையில் திங்கட்கிழமை கேரளாவை சேர்ந்த கைதப்புறம் தாமோதரன் நம்பூதிரிக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இவர் 400 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பாடல்கள் எழுதியுள்ளார். திரைப்படங்களிலும் நடித்துள்ளார். பத்மஸ்ரீ உள்ளிட்ட விருதுகளையும் பெற்றுள்ள இவருக்கு ஹரிவராசனம் விருது நினைவு பரிசு, ஒரு இலட்ச இந்திய ரூபாய் மற்றும் பாராட்டு பத்திரம் ஆகியவை வழங்கப்பட்டன. கேரள தேவசமபோர்டு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் வாசன் விருதை வழங்கினார்.

தாமோதரன் நம்பூதிரி, தேவசம்போர்டில் ஊழியராக பணியாற்றியுள்ளேன். விருதை அனைத்து தேவசம் ஊழியர்களுக் கும் சமர்ப்பிக்கிறேன். பாங்கோடு சாஸ்தா கோவிலில் பூஜாரியாக வேலை பார்க்கும் போது சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த பாடுபட்டேன். பூஞ்ஞாறில் பூஜாரி யாக இருந்த போது சம்பளமும், பக்தர்கள் தரும் தட்சணையும் வாங்குவதில்லை என்று நான் முடிவு எடுத்தேன். அந்த முடிவு அங்கு என் மீது மிகப்பெரிய மரியாதையை ஏற்படுத்தியது. கோவிலில் நைவேத்யத்தை ஏழைகளுக்கு வழங்கினேன். பசித்து வருபவர்களுக்கு உணவு கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம். சமூக கலாசார துறையில் என் செயல்பாடுகள் தான் நான் ஹரிவராசனம் விருது பெற காரணமாய் அமைந்தது. சபரிமலையில் அனைவரும் ஒன்று என்ற ஒரு மிகப்பெரிய தத்துவத்தை ஐயப்பன் கற்பித்துக் கொண்டிருக்கிறார். அவரை நன்றாக தரிசனம் செய்ய முடிந்தது மகிழ்ச்சியை தருகிறது என தெரிவித்தார்.

# பாலமேடு ஜல்லிக்கட்டு:

## 8 காளைகளை அடக்கி பார்த்தீபன் முதலிடம்

மதுரை மாவட்டம் பாலமேட்டில் ஜல்லிக்கட்டு போட்டியின் இறுதிச்சுற்றில் 8 காளைகளை அடக்கி நத்தம் பார்த்தீபன் முதலிடம் பெற்றுள்ளார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய ஊர்களில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் செவ்வாய்க்கிழமை அவனியாபுரத்தில் ஜல்லிகட்டு நடைபெற்று முடிந்த நிலையில், நேற்று பாலமேட்டில் ஜல்லிகட்டு போட்டி கோலாகமாக நடைபெற்றது.

பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்க ஒன்லைன் மூலம் 4 ஆயிரத்து 820 காளைகளும், ஆயிரத்து 914 மாடுபிடி வீரர்களும்



பதிவு செய்துள்ள நிலையில், போட்டியில் சுமார் 1000 காளைகளும் 900 மாடுபிடி வீரர்களும் களம் கண்டனர்.

மேலும், ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த காளைக்கு ட்ராக்டரும், சிறந்த மாடுபிடி வீரருக்கு கார் ஆகியவை பரிசாக வழங்கப்படவுள்ளது. இது தவிர கன்றுடன் பசு மாடு, இருசக்கர வாகனம், தங்கம் வெள்ளி காசுகள், சைக்கிள், பீரோ, உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்கள், சில்வர் பாத்திரங்கள் என ஏராளமான பரிசுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் இறுதிச்சுற்று நடைபெற்று வரும் நிலையில், 6 காளைகளை அடக்கி துளசி, கமல்ராஜ் இரண்டாம் இடத்தையும், பிரபா 5 காளைகளை அடக்கி மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

மேலும், பாலமேடு ஜல்லிக்கட்டில் இதுவரை 683 காளைகள் களம் கண்ட நிலையில் 125 காளைகள் பிடிபட்டன. மேலும் 43 பேர் காயமடைந்துள்ளனர். அதில் 5 பேர் மேல் சிகிச்சைக்காக அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# டெல்லியில் கடும் பனிமூட்டம்

தலைநகர் டில்லியில் அதிக அளவி லான பனிமூட்டம் காணப்படுவதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் டில்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று காலை கடும் பனிமூட்டம் சூழ்ந்து காணப்பட்டது. அடர்த்தியான மூடுபனியுடன் காணப்படும் டில்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமாக உள்ளது.

பல இடங்களில் தெரிவுநிலை பூஜ்ஜியமாகக் குறைந்தது. இதனால் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 10 அடிக்கு முன்னால் செல்லும் வாகனங்கள் கூட தெரியாத அளவிற்கு பனிமூட்டம் நிலவியதால் வாகன சாரதிகள் கடும் அவதியடைந்தனர். அதேபோல் ரயில் மற்றும் விமான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன. விமானச் செயல்பாடுகள் சீராக இருக்கும் என்றும் ஆனால் விமானப் பயணிகளை தங்கள் விமானங்களைப் பற்றி தொடர்ந்து அறிந்துகொள்ளும்படி விமான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

டில்லி விமான நிலையத்தில் தரையிறங்கும் மற்றும் புறப்படும்போது விமானங்கள் பாதிக்கப்படலாம். புதுப்பிக் கப்பட்ட விமானத் தகவல்களுக்கு சம்பந்த ப்பட்ட விமான நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுமாறு பயணிகள் கேட்டுக் கொள் ளப்படுகிறார்கள். ஏதேனும் அசௌ கரியம் ஏற்பட்டால் வருந்துகிறோம் என டெல்லி விமான நிலையம் மீண்டும் முன்னெச் சரிக்கை விடுத்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நிலவிய பனிமூட்டம் காரணமாக ரயில் போக்குவரத்து பாதிக்கப் பட்டதுடன் குறைந்தது 39 ரெயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன. டில்லியில் நேற்று காலையில் 9 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது. காலையில் அடர்த்தியான மூடுபனியும் பின்னர் பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் மாலை அல்லது இரவில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதால் மக்களை அவதானமாக செயற்படுமாறு இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உலக வலம் WORLD NEWS

பா. கிருஷிகா



# தென் கொரிய ஜனாதிபதி யூன் கைது

## பாதுகாப்பு தடுப்பை மீறி புலனாய்வு அதிகாரிகளால் கைது

தென் கொரியாவின் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதியான யூன் சுக் யோல் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இதனை தென் கொரிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவரை கைது செய்ய இரண்டாவது முறையாக அதிகாரிகள் நேற்று முயற்சி செய்தனர். முதல் முறையைப் போலவே, இம்முறையும் அவரது பாதுகாப்புப் பிரிவினர் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டனர். வீட்டை சுற்றிலும் யூன் சுக் யோலின் பாதுகாப்பு சேவையால் தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. இதனால் வேறு வழியின்றி, சில அதிகாரிகள் ஏணிகளைப் பயன்படுத்தி அவரது வீட்டுக்குள் நுழைந்ததாக யோன்ஹாப் என்ற தென் கொரிய ஊடகம் தெரிவித்துள்ளது.

யூன் சுக் யோலை கைது செய்து அவரது இல்லத்தில் இருந்து புலனாய்வு அதிகாரிகள் அழைத்து சென்றதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. "புலனாய்வு அதிகாரிகள் யூனை கைது செய்ய வழங்கப்பட்டிருந்த உத்தரவை நிறைவேற்றிவிட்டதாக", தென் கொரியாவின் ஊழல் புலனாய்வு அலுவலகம் (CIO) தெரிவித்துள்ளது. இம்மாத ஆரம்பத்தில் யூனை கைது செய்வதற்கான முதல் முயற்சி தோல்வியடைந்த நிலையில், அவரை கைது செய்ய நீதிமன்றம் கூடுதல் கால அவகாசம் வழங்கியது. கடந்த டிசம்பர் மாதத்தில் தென் கொரியாவில் இராணுவ ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என்ற யூனின் குறுகிய கால முயற்சிக்குப் பிறகு, பல வாரங்களாக யூனிடம் விசாரணை நடைபெற்று வந்தது.





யூனின் அதிகாரப்பூர்வ இல்லத்திற்கு வெளியே அவரது ஆதரவாளர்கள் மற்றும் விமர்சகர்கள் ஆகியோர் திரளாக கூடியிருந்ததுடன் மேலும் அவர்களை கட்டுப்படுத்த 1000 பேர் கொண்ட காவல்படை அங்கு குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகள் அவரது வீட்டிற்குள் நுழைந்ததை அடுத்து, யூனின் ஆதரவாளர்கள் மிகவும் கோபமாகவும் வருத்தத்துடனும் இருந்ததுடன் யூனின் வீட்டிற்குள் நுழைவது சட்டவிரோதமானது என்று அவரது ஆதரவாளர்கள் கோஷமிட்டுள்ளனர். யூனின் இராணுவச் ஆட்சி அமுல்படுத்தப்படும் என்ற அறிவிப்புக்கு பிறகு ஏற்பட்டிருக்கும் விளைவுகள் அவரை விசாரிக்கும் ஊழல் புலனாய்வு அலுவலகத்திற்கு (CIO) சவாலாக உள்ளது. இந்த அமைப்பு (CIO) ஆரம்பித்து நான்கு ஆண்டுகள் மட்டுமே ஆகின்றது. இன் மூலம் முன்னாள் ஜனாதிபதி பார்க் கியூன்-ஹே மீதான பொதுமக்களின் கோபத்திற்கு பதிலளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, ஊழல் மோசடிக்காக சிறையில் அடைக்கப்பட்டார். தென் கொரிய ஜனாதிபதிகள் இதற்கு முன்பு சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும், பதவி விலகுவதற்கு முன்பு கைது நடவடிக்கையை எதிர்கொண்ட முதல் நபர் யூன் ஆவார்.

ஊழல் புலனாய்வு அலுவலகத்தில் ஆஜராக ஒப்புக்கொண்டுள்ளதாக வீடியோ பதிவு ஒன்றின் மூலம் யூன் சுக் யோல் தெரிவித்துள்ளார். "இந்த விசாரணை சட்டவிரோதமாக இருந்தாலும், எந்தவொரு விரும்பத்தகாத வன்முறையும் நடக்காமல் தடுப்பதற்காக ஊழல் புலனாய்வு அலுவலகத்தில் ஆஜராக முடிவு செய்தேன். ஆனால் இதன் மூலம் நான் அவர்களின் இந்த விசாரணையை ஏற்றுக்கொள்கிறேன் என்று பொருளல்ல", என அவர் தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவில் சட்டத்தின் ஆட்சி நடக்கவில்லை என்றும், தன்னை விசாரணை செய்யும் அமைப்புகளுக்கோ அல்லது தன்னை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கும் நீதிமன்றங்களுக்கோ, அவ்வாறு செய்ய அதிகாரம் இல்லை என்றும் "இவை இருண்ட நாட்கள் என்றாலும், இந்த நாட்டின் எதிர்காலம் நம்பிக்கைக்குரியதாகவே இருக்கின்றது" என அவர் தெரிவித்துள்ளார்.

# சூடானில் ஷெல் தாக்குதல்: 120 பேர் பலி



நைல் ஆற்றின் குறுக்கே தலைநகர் கார்ட்டூமின் இரட்டை நகரமான ஓம்டுர்மன் பகுதியில் ஷெல் தாக்குதலில் 120 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக சூடான் தன்னார்வ மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

மேற்கு ஓம்டுர்மானில் திங்கட்கிழமையன்று நடந்த "தொடர் ஷெல் தாக்குதலில்" 120 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், போரினால் பாதிக்கப்பட்ட நாடு முழுவதும் தன்னார்வ மீட்பு பணியாளர்கள் வலையமைப்பின் ஒரு பகுதியான ஓம்பாடா அவசரகாலநிலையை பிரகடனப்படுத்தியது. தாக்குதலை நடாத்தியவர்கள் யார் என்ற தகவல் உத்தியோகபூர்வமாக இதுவரை வெளியிடப்படவில்லை.

"பல்வேறு அளவிலான காயங்களால் பாதிக்கப்பட்ட ஏராளமான காயமடைந்தவர்களுக்கு" சிகிச்சையளிக்க சுகாதார ஊழியர்கள் போராடியதால், மருத்துவப் பொருட்கள் மிகவும் பற்றாக்குறையாக இருப்பதாக மீட்புப்படையினர் தெரிவித்தனர்.

சூடானில் 20 மாதங்களுக்கும் மேலான போருக்குப் பிறகு சமீபத்திய வாரங்களில் இராணுவத்திற்கும் துணை இராணுவ விரைவு ஆதரவுப் படைகளுக்கும் (RSF) இடையே போர் அதிகரித்துள்ளது. தேசத்தை பஞ்சத்தின் விளிம்பில் கொண்டு சென்ற போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக உதவி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இராணுவம் மற்றும் (RSF) ஆகிய இரண்டும் சுகாதாரப் பணியாளர்கள் உட்பட பொதுமக்களை குறிவைத்து, குடியிருப்பு பகுதிகளுக்கு கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஓம்டுர்மானின் பெரும்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது, அதே நேரத்தில் சுளுகு தலைநகரையும் பெரிய கார்டூம் பகுதியின் ஒரு பகுதியையும் கொண்டுள்ளது.

# அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் ஆளில்லா விமான தாக்குதல்; 6 பேர் பலி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ஜெனின் அகதிகள் முகாம் மீது இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆறு பேரில் ஒரு பலஸ்தீனிய இளைஞனும் மூன்று சகோதரர்களும் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

செவ்வாய்க்கிழமை மாலை முகாமில் உள்ள போக்குவரத்து பாதை அருகே ஒரு குழு மக்கள் மீது, இஸ்ரேலிய ஆளில்லா விமானம் மூன்று ஏவுகணைகளை வீசியது, 15 வயது சிறுவன் உட்பட 6 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான Wafa தெரிவித்தது.

தாக்குதலில் பலியான மற்ற ஐந்து பேர் 23 முதல் 34 வயதுக்குட்பட்டவர்கள், மேலும் மூன்று சகோதரர்களும் அடங்குவர் என்று வஃபா தெரிவித்துள்ளது. இந்த மாத தொடக்கத்தில், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் தம்மூன் நகரில் இஸ்ரேலிய ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பலஸ்தீனிய குழந்தைகளும் 23 வயது இளைஞரும் கொல்லப்பட்டனர்.

கடந்த பல வாரங்களாக பலஸ்தீனிய எதிர்ப்புப் போராளிகளைக் குறிவைத்து, பலஸ்தீனிய அதிகாரத்தின் (PA) பாதுகாப்புப் படையினரால் ஜெனின் முகாமில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மத்தியில், இந்த கொடிய ட்ரோன் தாக்குதலும் முக்கியமானது. இதன் விளைவாக ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர்.

பொதுஜன முன்னணியின் பாதுகாப்புப் படைகளின் செய்தித் தொடர்பாளர் அன்வர் ரஜப், ஜெனினில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை அடைவதற்கான அதிகாரத்தின் "முயற்சிகளை சீர்குலைப்பதே" இந்த தாக்குதலின் நோக்கமாக இருந்தது என்றார். பலஸ்தீனியர்களை கண்மூடித்தனமாக கொல்ல இஸ்ரேலின் விருப்பத்தை ஆளில்லா விமான தாக்குதல் நிரூபித்ததாக பலஸ்தீன சட்ட சபையின் துணை சபாநாயகர் ஹசன் க்ரைஷே தெரிவித்தார். "ஒவ்வொரு பலஸ்தீனியனும் ஒரு இலக்கு என்பது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து ஒரு தெளிவான செய்தியாகும்" எனவும் க்ரைஷே தெரிவித்தார்.

# ரஷ்ய இராணுவ தொழிற்சாலைமீது உக்ரேன் கடும் தாக்குதல்

ரஷ்யாவின் வெடிபொருட்கள் தயாரிக்கும் இராணுவ தொழிற்சாலை மற்றும் எண்ணெய் சேகரித்து வைக்கும் குதம் மீது உக்ரேன் கடும் தாக்குதல் நடாத்தியது. 200 கி.மீ. முதல் 1100 கி.மீ வரையிலான ரஷ்யா பகுதிக்குள் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ரஷ்யாவில் உள்ள சரடோ, ஏஞ்சல்ஸ், பிரியன்ஸ்க், துலா, டார்ஸ்டன் ஆகிய நகரங்கள் மீது உக்ரேன் நாட்டின் ஏவுகணைகள் நூற்றுக்கணக்கில் சீறிப்பாய்ந்து தாக்கின. திடீரென உக்ரேன் ஏவுகணைகள் இத்தகைய பலமுனை தாக்குதலை நடத்தும் என ரஷ்யா எதிர்பார்க்கவில்லை. என்றாலும் சுதாரித்துக் கொண்ட ரஷ்ய இராணுவம் பதிலடி தாக்குதலை நடத்தியது. செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் மறுநாள் அதிகாலை வரை விடிய விடிய இந்த தாக்குதல்கள் நடந்தன. உக்ரேன் ஏவுகணைகள் ரஷ்யாவின் இராணுவ தொழிற்சாலையை தாக்கி அழித்ததாக உக்ரேன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அந்த இராணுவ தொழிற்சாலை பீரங்கி, வெடிகுண்டுகள் மற்றும் ஏவுகணைகள் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலை ஆகும். ஆனால் இராணுவ தொழிற்சாலைக்கு பாரிய அளவில் சேதம் ஏற்படவில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.





அதுபோல ரஷ்யாவின் விமான எரிபொருள் சேமிப்பு நிலையமான எண்ணெய்க்குதம் மீதும் உக்ரேன் குறி வைத்து ஏவுகணைகளை வீசியது. இதில் எண்ணெய்க்குதம் தீப்பற்றி எரிந்ததாக உக்ரேன் தெரிவித்துள்ளது. ஆனால் அந்த எண்ணெய்க்குதத்தை நோக்கி வந்த ஏவுகணைகளை நடுவழியில் மறித்து அழித்து விட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது. இந்த எண்ணெய்க்குதம் உக்ரேன் போரில் ரஷ்ய இராணுவத்துக்கு முக்கிய பங்களிப்பு செய்து வருகிறது. ரஷ்யாவின் குண்டு வீசும் போர் விமானங்களுக்கு எரிபொருள் விநியோகம் முழுமையாக இங்கிருந்துதான் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களில் ரஷ்யா மீது உக்ரேன் நாடு நடத்தி வரும் மிகப்பெரிய தாக்குதல்களில் இதுவும் ஒன்றாக கருதப்படுகிறது.

# '20 நாடுகளுக்கு பயணத் தடை' அமெரிக்கா எச்சரிக்கை






ரஷ்யா, வட கொரியா உட்பட 20 நாடுகளுக்கு பயணம் செய்ய வேண்டாம் என அமெரிக்க அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்த பட்டியலில் ரஷ்யா, வட கொரியா, ஈரான், ஈராக், உக்ரேன், ஆப்கானிஸ்தான், பெலாரஸ், சிரியா, லெபனான், லிபியா, சோமாலியா, சூடான், வெனிசுவேலா மற்றும் ஏமன் உள்ளிட்ட 20 நாடுகள் இடம் பெற்றுள்ளன. மேற்கண்ட நாடுகளில் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் காணப்படுவதால் பாதுகாப்பு கொண்டு இந்த நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும் என அமெரிக்க அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உக்ரேன் – ரஷ்ய போர், சிரியாவின் உள்நாட்டு போர் ஆகியவை ஆபத்தான சூழலை உருவாக்கியுள்ளன. சோமாலியா, லிபியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் பயங்கரவாத குழுக்களின் அச்சுறுத்தல்கல் இருக்கிறது. பெலாரஸ் மற்றும் வெனிசுவேலா போன்ற நாடுகளில் அரசியல் நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. வட கொரியாவில் வெளிநாட்டினர் மீது கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட்டை கைவிட்ட ICC

## பெரோசா ஆமிர் குற்றச்சாட்டு






ICC ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணியை கைவிட்டுள்ளதாகவும்,அவர்கள் எங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டியதோடு,ICC எங்களுக்கு சார்பாக பெசியிருந்தால் நாம் நாட்டை விட்டு போயிருக்க மாட்டோம் என்று ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணியின் பெரோசா ஆமிர் அவுஸ்திரேலிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் பெண்கள் கிரிக்கெட் விளையாடுவதை தடை செய்தனர்.

அதன் பின்னர் கிரிக்கெட்டில் ஈடுபட்ட பல வீராங்கனைகள் நாட்டை விட்டு வெளியேறி சென்றனர்.

கிரிக்கெட் தடையை அடுத்து பெரோசா ஆமிர் உட்பட 25 வீராங்கனைகள் முதலில் பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்று அவுஸ்திரேயாவில் தஞ்சமடைந்தனர்.

இப்போது அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் பெரோசா அமீர் இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஆமிர் உட்பட தேசிய கிரிக்கெட் வீராங்கனைகள் அகதிகள் அல்லது தஞ்சம் கோரிய கிரிக்கெட் அணியாக விளையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ICCயிடம் கேட்டுக் கொண்ட போதும், ICC இன்று வரை எதுவும் தெரிவிக்காமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால், ICC இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளதாவது,

ஆப்கானிஸ்தான் பிரச்சினை தொடர்பில் கவனம் தெலுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் ICC குறிப்பிட்டுள்ளது.

ஆனால் ஏற்பட்டுள்ள குழப்பகரமான சூழலில் வீராங்கனைகளுக்கு நாட்டை விட்டுப் போகும் நிலை உருவானது.

ஆமிருக்கு அவுஸ்திரேலியாவில் வேலை செய்வதற்கு ஆங்கிலம் கற்க வேண்டிருப்பதாக தெரிவிக்கிறார்.

ஜனவரி 30 ஆம் திகதி அவுஸ்திரேலியா –இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மகளிர் டெஸ்ட் போட்டி மெல்பர்னில் நடைபெறவுள்ளது.அதற்கு முன்னர் ஒரு கண்காட்சி போட்டியில் ஆப்கானிஸ்தான் விளையாடவுள்ளது.இப் போட் ஆப்கானிஸ்தானில் மட்டுமல்ல உலக வாழ் ஓடுக்கப்பட்ட பெண்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும் என்பது ஆமிரின் எதிர்ப்பாகும்.

அத்தோடு இங்கிலாந்து கிரிக்கெட் சபையில் நிறைவேற்றதிகார உறுப்பினரான ரிச்சட் குள்டி, ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு வழங்கப்படும் நிதியை நிறுத்துமாறு ICCயிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

தான் ஒரு கிரிக்கெட் வர்ணனையாளராக ஆவதே தனது எதிரகால கனவாகும் என ஆமிர் குறிப்பிட்டுள்ளார்.




# அமானியன்ஸ் கிரிக்கெட் பியஸ்டா 2025

(அரபாத் பஹுர்தீன்)

மினுவாங்கொடை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கு இடையில் அமானியன்ஸ் கிரிக்கெட் பியஸ்டா –2025 தொடரின் சம்பியன் பட்டத்தினை 2021ஆம் ஆண்டு சாதாரண தர அணி கைப்பற்றியுள்ளது.

நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட மினுவாங்கொடை, கல்லொழுவ அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது பழைய மாணவர்களுக்கு இடையிலான அமானியன்ஸ் கிரிக்கெட் பியஸ்டா –2025 தொடர் கடந்த 12,13 மற்றும் 14ஆம் திகதிகளில் முனாஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 1986ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் முதல் 2021ஆம் சாதாரண தரம் எழுதிய மாணவர்கள் வரை சுமார் 26 அணிகள் பங்கேற்றிருந்தன.

இதில் முதல் சுற்று லீக் அடிப்படையில் இடம்பெற்று பின்னர் காலிறுதி மற்றும் அரையிறுதி என்பன விலகல் முறையில் இடம்பெற்றிருந்தன

அதற்கேற்ப அரையிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற 2005 மற்றும் 2021 ஆகிய இரு அணிகளும் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடாத்தின. நேரம் போதாமை காரணமாக 4 பந்துகள் கொண்ட 4 ஓவர்களாக இடம்பெற்ற போட்டியில் முதலில் துடுப்பாடிய 2021ஆம் ஆண்டு அணி 20 ஓட்டங்களைப் பெற, பதிலுக்கு துடுப்பாடிய 2025ஆம் ஆண்டு அணி 10 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள 10 ஓட்டங்களால் இலகு வெற்றி பெற்ற 2021ஆம் ஆண்டு அணி சம்பியனாது.



CHAMPIONS 2021 (O/L) BATCH



RUNNERS-UP 2005 (O/L) BATCH

இத்தொடரின் சிறந்த வீரராக 2021ஆண்டு அணியின் தலைவரான அர்ஹம் தெரிவானார்.

மேலும் அல் அமான் பாடசாலைக்கு 2005ஆம் ஆண்டு அணியினர் தேசிய தரத்திலான பெட்மிண்டன் மைதானத்தினை அமைத்துக் கொடுப்பதாக பாடசாலை அதிபரிடம் உத்தரவாதமளித்தமை விசேட அமசமாகும்.

## இங்கிலீஷ் பிரீமியர் லீக் 2024-2025

# லிவர்பூல் - நாட்டிங்காம் பாரஸ்ட் போட்டி சமனிலையில் முடிவு

இங்கிலீஷ் பிரீமியர் லீக் 2024-2025 சீசனுக்கான போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற போட்டியில் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் லிவர்பூல், நாட்டிங்காம் பாரஸ்ட் (Nottm Forest) அணியுடன் மோதின. இதில் லிவர்பூல் அணி எளிதாக வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நாட்டிங்காம் பாரஸ்ட் அணியின் கிறிஸ் வுட் 8ஆவது நிமிடத்தில் கோல் அடித்து லிவர்பூல் அணிக்கு அதிர்ச்சி அளித்தார். அதன்பின் முதல்பாதி நேர ஆட்டம் முடியும் வரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

பின்னர் 2ஆவது பாதிநேர ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டத்தின் 66ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் டியாகோ ஜோட்டா கோல் அடித்தார். இதனால் ஸ்கோர் 1–1 என சமநிலை பெற்றது. அதன்பின் இரண்டு அணிகளும் கோல் அடிக்காத நிலையில் ஆட்டம் 1–1 சமநிலையில் முடிந்தது.

போட்டி சமநிலையில் முடிந்தாலும் லிவர்பூல் 20 போட்டிகளில் 14–ல் வெற்றி பெற்று 47 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. நாட்டிங்காம் பாரஸ்ட் இந்த சமன் மூலம் 21 போட்டிகளில் 12 வெற்றி, 5 சமன், 4 தோல்விகளுடன் 41 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்தை பிடித்துள்ளது. ஆர்சனல் 20 போட்டிகளில் 11ல் வெற்றி, 7–ல் சமன், 2–ல் தோல்வி என 40 புள்ளிகள் பெற்று 3–வது இடத்தை பிடித்துள்ளது.

**மான்செஸ்டர் சிட்டி**

மேலும் ஒரு ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி ப்ரென்ட்போர்டு அணியை எதிர்கொண்டது. முதல் பாதி நேர ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. 2ஆவது பாதி நேர ஆட்டத்தில் மான்செஸ்டர் அணியின் பில் ஃபோடன் 66 மற்றும் 78–வது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல் அடித்து அசத்தினார்.

இதனால் மான்செஸ்டர் சிட்டி வெற்றிபெறும் நிலையில் இருந்தது. ஆனால் கடைசி 10 நிமிடத்தில் ப்ரென்ட்போர்டு அணி அபாரமாக விளையாடியது. அந்த அணியின் விஸ்டா 82–வது நிமிடத்தில் கோல் அடித்தார். அதன்பின் காயத்திற்கான நேரத்தில் (90+2) கிறிஸ்டியன் நோர்கார்டோ கோல் அடிக்க போட்டி சமனில் முடிந்தது.

இந்த சமன் மூலம் மான்செஸ்டர் சிட்டி 21 போட்டிகள் முடிவில் 10 வெற்றி, 5 சமன் மூலம் 35 புள்ளிகள் பெற்று புள்ளிகள் பட்டியலில் 6ஆவது இடத்தை பிடித்துள்ளது. வெற்றி பெற்றிருந்தால் 4ஆவது இடத்திற்கு முன்னேறியிருக்கும்.





# காம்பீர் தலைமையிலான பயிற்சி குழுவில் வெட்டுக்குத்து



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போர்டர் கவாஸ்கர் தொடரின் போது இந்திய அணியின் தலைமை பயிற்சியாளரான கம்பீருக்கும் பந்துவீச்சு பயிற்சியாளரான மோர்னே மோர்க்கலுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளது.

பிசிசிஐ சில ஆண்டுகளாக உள்நாட்டு பயிற்சியாளர்களையே அணியில் நியமிக்கும் முடிவை எடுத்தது.

ஆனால் இந்த நடைமுறையை கம்பீர் வந்த பிறகு மாற்றினார். தமக்கு மோர்னே மோர்க்கல் தான் வேண்டும் என்று அவர் அடம் பிடித்தார். அதேபோன்று நெதர்லாந்து வீரர் டோஷெட் மற்றும் அபிஷேக் நாயர் போன்ற வீரர்களும் பயிற்சி குழுவில் இடம் பெற வேண்டும் என்று நம்பி வலியுறுத்தினார்.

இதனை அடுத்து கம்பீரின் கோரிக்கைக்கு பிசிசிஐ ஒப்புதல் வழங்கியது. இந்த நிலையில் பயிற்சியாளர் கம்பீருக்கும், மோர்னே மோர்க்கலுக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருக்கிறது. அதாவது அவுஸ்திரேலியாவில் இந்திய அணி பயிற்சி செய்து கொண்டிருந்த போது மோர்க்கல் தாமதமாக மைதானத்திற்கு வந்திருக்கிறார்.

இதனால் கடும் கோபம் கொண்ட கம்பீர் மோர்க்கலை மைதானத்தை விட்டு அனுப்பி அவருக்கு அபராதம் விதித்திருக்கிறார். இது மோர்க்கல் மனதில் மிகப்பெரிய காயத்தை ஏற்படுத்தி விட்டது. இதனை தொடர்ந்து மோர்க்கல் கம்பீர் தொடர் முழுவதும் பெரிய அளவு பேசிக்கொண்டது இல்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதைப் போன்று ரியான் டென் டோசேட் மற்றும் அபிஷேக் நாயர் ஆகியோரின் செயல்பாடும் தற்போது சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பேட்டிங் பயிற்சியாளராக செயல்படும் அபிஷேக் , இந்திய வீரர்களின் பேட்டிங் திறனை மேற்கொள்ள எந்த ஒரு முயற்சியும் செய்யவில்லை என தெரிகிறது.

விராட் கோலி தொடர்ந்து ஒரே முறையில் ஆட்டம் இழந்ததை சுட்டிக்காட்டி உள்ள கிரிக்கெட் வீரர்கள், இதனை சரி செய்ய அபிஷேக் நாயர் எந்த முயற்சி எடுத்தார் என்று கேள்வி எழுப்பியுள்ளனர். அதேபோன்று துணை பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள ரியான் டோசேட் சர்வதேச அளவில் புதிய அனுபவங்கள் பெறவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது. இதனால் அவரும் இந்திய கிரிக்கெட்டுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் பயிற்சியாளர் குழுவில் இடம் பெற்றுள்ள அபிஷேக் நாயர் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வர பிசிசிஐ யோசித்து வருகிறது.

# சம்பியன்ஸ் கிண்ணம்

## பாகிஸ்தான் செல்லும் ரோஹித் சர்மா



ஐசிசியின் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் பெப்ரவரி 19ஆம் திகதி பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் இத்தொடருக்கான ஆரம்ப நிகழ்வை பெப்ரவரி 16 மற்றும் 17ஆம் திகதிகளில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. மேலும் ஐசிசி நிகழ்வுகளில் வழக்கமான நடைமுறையான தொடக்க விழாவில் அனைத்து அணி கெப்டன்களும் பங்கேற்பது வழக்கமான ஒன்றாக இருந்து வருகிறது. அந்த வகையில் இந்திய அணி கெப்டன் ரோஹித் சர்மா இந்த நிகழ்வில் பங்கேற்பாரா என்ற கேள்விகள் அதிகரித்துள்ளன.

ஆனால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் தொடக்க விழாவில் கலந்து கொள்ள இந்திய அணி கெப்டன் பாகிஸ்தான் செல்லவுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் 29 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானில் ஒரு மெகா சர்வதேச கிரிக்கெட் போட்டி மீண்டும் நடைபெறுவதைக் குறிக்கும் வகையில், பிசிபி பிரமாண்டமான நிகழ்வைத் திட்டமிட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இதுகுறித்து எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாக வில்லை.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 16ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.